வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

ඊළනාඩු


மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram. மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 24.05.2023 புதன்கிழமை | இதழ் : 166 | பக்கங்கள் : 16

# தையிட்டியில் போராட்டம் முன்னணியினர் 9 பேர் கைது!

**★ கஜேந்திரன் எம். பியை தூக்கி வீதியில் வீசியது பொலிஸ்**
**★ நேற்றிரவும் போராட்டம் தொடர்ந்தது**



**யாழ்ப்பாணம், மே 24**

**தமிழர் நிலத்தை ஆக்கிரமித்து கட்டப்பட்ட தையிட்டி விகாரையை அகற்ற வேண்டும் என்று கோரி போராட்டம் நடத்திய 4 பெண்கள் உட்பட 9 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன், போராட்டத்தில் ஈடுபட்டிருந்த கஜேந்திரன் எம்.பியை சுமார் நூறு மீற்றர் தூக்கிச் சென்ற பொலிஸார் அவரை வீதியில் வீசிச் சென்றனர்.**

வலி. வடக்கின் தையிட்டி கிராமத்தில் தமிழ் மக்களுக்கு சொந்தமான காணியில் இராணுவம் திஸ்ஸ விகாரையை அமைத்துள்ளது. இந்த விகாரை நாளை மறுதினம் திறந்து வைக்கப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த நிலையில், அந்த விகாரையை அகற்ற வேண்டும் என்றும் விகாரைக்கு அருகாகவுள்ள காணிகளை உடனடியாக உரியவர்களிடம் ஒப்படைக்க வேண்டும் எனவும் கோரி தமிழ்த் தேசிய பேரவை (தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி) ஏற்பாட்டில் மீண்டும் நேற்று முன்தினம் திங்கட்கிழமை போராட்டம் ஆரம்பமானது.

நேற்று செவ்வாய்க்கிழமை 15

## மன்னாரில் கோர விபத்து: ஒருவர் பலி; ஐவர் படுகாயம்!

மன்னார், மே 24

வேகக் கட்டுப்பாட்டை இழந்த 'மகேந்திரா' வாகனம் முச்சக்கர வண்டியை மோதியதில் ஒருவர் உயிரிழந்தார். மூன்று குழந்தைகள் உட்பட ஒரே குடும்பத்தை சேர்ந்த ஐந்து பேர் படுகாயமடைந்துள்ளனர்.

மன்னார் பிரதான பாலம் அருகே நேற்று முற்பகல் 11 மணியளவில் இடம்பெற்ற இந்த விபத்தில் முச்சக்கர வண்டியின் சாரதியே உயிரிழந்தார்.

இந்த விபத்துக் குறித்து மேலும் அறிய வருவதாவது,

மன்னாரில் இன்றைய தினம் நிகழும் திருமண நிகழ்வுக்காக வவுனியாவிலிருந்து கணவன், மனைவி அவர்களின் 9, 6, 4 வயது பிள்ளைகள் மூவர் முச்சக் கர வண்டியில் மன்னாருக்கு 15

## நலன்புரி கொடுப்பனவுகள் இனி பயனாளரின் வங்கி கணக்குக்கு!

கொழும்பு, மே 24

'அஸ்வெசும' நலன்புரி நன்மைகள் கொடுப்பனவுகளை ஜூலை மாதம் முதல் பயனாளர்களின் வங்கிக் கணக்கில் நேரடியாக வைப்பிலிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று நலன்புரி நன்மைகள் சபை அறிவித்துள்ளது.

சமுர்த்தி மற்றும் முதியோர் உதவித்திட்டம் உட்பட தற்போது அரசாங்கத்தால் வழங்கப்படும் நலன்புரி உதவிகளை பெறுவோருக்கே நேரடியாக பணம் வைப்பிலிடப்படவுள்ளது.

நலன்புரி திட்டங்களின் பயனாளர்கள் தமது கொடுப்பனவுகளை பெற்றுக் கொள்வதில் 15

## தண்ணீரே வராத வடக்குக்கு மகாவலி 'ஜே' வலயம் எதற்கு?

### சுரேஷ் பிறேமசந்திரன் கேள்வி

யாழ்ப்பாணம், மே 24

வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவையும் முல்லைத்தீவு மாவட்டத்தையும் மையப்படுத்தி 'மகாவலி ஜே' வலயம் என்ற பெயரில் மகாவலி அபிவிருத்தி அதிகார சபையால் புதிய வலயம் ஒன்றைத் தோற்றுவிக்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றது. ஏற்கனவே மகாவலி ஆற்றின் நீர் வடக்கு மாகாணத்துக்கு வருவதற்கு சாத்தியமே இல்லை என்று மகாவலி அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ள நிலையில் புதிதாக உருவாக்கப்படும் ஜே வலயத்தின் உண்மையான நோக்கம் என்ன என்பதை அரசாங்கம் விளக்க வேண்டும். 15

## முன்னாள் புலி உறுப்பினருக்கு மேல் நீதிமன்று ஆயுள் தண்டனை!

கொழும்பு, மே 24

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர் ஒருவருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் ஆயுள் தண்டனை விதித்து நேற்று தீர்ப்பளித்துள்ளது.

தங்கவேலு நிமலன் என்பவருக்கே இவ்வாறு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.

கொழும்பில் தற்கொலை குண்டுத் தாக்குதலை நடத்துவதற்காக வெடிபொருட்கள் மற்றும் 2 மைக்ரோ ரக கைத்துப்பாக்கிகளை வைத்திருந்த குற்றச்சாட்டில் அவர் குற்றவாளியாக காணப்பட்டுள்ளார்.

2009ஆம் ஆண்டு இரத்மலானை பிரதேசத்தில் இரண்டு மைக்ரோ கைத்துப்பாக்கிகள், சி-4 ரக உயர் வெடி மருந்துகள் மற்றும் 15

## ஏ. எல். விடைத்தாள் திருத்தும் பணி ஜூனுக்குள் நிறைவுறும்

### கல்வி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, மே 24

க. பொ. த. உயர்தர பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு பணிகள் தற்போது முழுமையாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்த, கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, விடைத்தாள் திருத்தும் பணி ஜூன் இறுதிக்குள் நிறைவடையும் எனவும் கூறினார்.

தற்போது அனைத்துப் 15

## மாகாண சபைகள் தேர்தலை நடத்துமாறு இந்தியா அழுத்தம்?

கொழும்பு, மே 14

பல வருடங்களாக நடத்தப்படாது இருக்கும் மாகாண சபைகளுக்கான தேர்தலை உடன் நடத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு இந்தியா அழுத்தம் கொடுத்து வருகின்றது என ஜனாதிபதிக்கு நெருக்கமான வட்டாரங்கள் மூலம் அறிய வருகின்றது.

2017இல் மாகாண சபை களின் ஆயுள் காலம் முடிந்ததில் இருந்து மாகாண சபைகளுக்கு தேர்தல் நடத்தப்படவில்லை. அப்போது இருந்த மைத்திரி - ரணில் அரசும் சரி, அதன் பின் உருவான கோட்டாபய அரசும் சரி அந்தத் தேர்தலை நடத்துவதற்கு எந்த 15

## புத்தசாசனத்தை பாதுகாத்து வளர்ப்பது அரசின் பொறுப்பு

### சஜித்துக்கு பிரதமர் இப்படி உறுதி

கொழும்பு, மே 24

புத்தசாசனத்தை பாதுகாக்கவும் வளர்ச்சி பெற செய்யவும் அரசாங்கம் பொறுப்புடன் செயல்படும் - என்று பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் கருத்துக்கு பதில் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார். 15



## இரசாயன ஆயுதங்களை போரில் பாவிக்கவில்லை

### சரத் வீரசேகர எம். பி. கூறுகிறார்

கொழும்பு, மே 24

இறுதி கட்ட யுத்தத்தின் போது இரசாயன குண்டு தாக்குதல் பிரயோகிக்கப்படவில்லை. மூன்று இலட்சம் தமிழர்களை விடுதலை புலிகள் அமைப்பு பணய கைதிகளாக வைத்திருந்தபோது எங்கு சென்றீர்கள்? என்று பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தமிழரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரனை நோக்கி கேள்வி எழுப்பினார்

பாராளுமன்றில் 15

## ஜனக ரத்நாயக்க இன்று பதவி நீக்கப்படுவாரா?

கொழும்பு, மே 24

ஜனக ரத்நாயக்கவை பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் பதவியில் இருந்து நீக்குவது தொடர்பான பிரேரணை பாராளுமன்றத்தில் இன்று புதன்கிழமை விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

உண்மையான மக்கள் பிரதிநிதிகள் தனக்கு ஆதரவாக செயல்படுவார்கள் என்று நம்புவதாக நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் ஜனக ரத்நாயக்க கூறினார்.

முன்னாள் 15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

# இப்படியும் நடக்கிறது...!

புலம்பெயர் தமிழர்கள் இலங்கையில் முதலிட முன்வர வேண்டும் என்று தெற்கில் இருந்து தொடர்ச்சியான கோரிக்கைகள் முன்வைக்கப் பட்டு வருகின்றன.

இந்தக் கோரிக்கையை முன் னர் ஆட்சியிலிருந்த கோட்டா பய ராஜபக்ஷவும் விடுத்திருந் தமை வாசகர்களுக்கு நினை விருக்கலாம்.

இப்படி ஆட்சியாளர்கள் கோரிக்கை விடுக்கின்றபோ தெல்லாம் புலம்பெயர் நாடு களிலிருந்து ஒரு சிலர் ஆட்சி யாளர்களுடன் தொடர்பு கொண்டு தாங்களே புலம் பெயர் தமிழர்களின் பிரதிநிதி கள் போலவும் தாங்கள் நினைத் தால் அங்கிருந்து முதலீடுகளை கொண்டுவந்து கொட்டமுடி யும் என்றும் கதையளப்பார்கள். அவற்றை நம்பிக்கொண்டு ஆட்சியிலுள்ள சிலர் பத்திரிகை களுக்கு அறிக்கை விடுவார் கள்.

அண்மையில், ஐக்கிய தேசியக் கட்சியின் செயல்குழுக் கூட்டத்தில் உரையாற்றிய அந் தக் கட்சியின் பொதுச்செயலா ளர் பாலித ரங்கே பண்டார, புலம்பெயர் தமிழர்கள் இலங் கையில் முதலிடத் தயாராக இருக்கின்றனர் எனவும் தன் னோடு அவர்கள் தொடர்பு கொண்டனர் என்றும் தெரிவித் திருக்கிறார்.

முதலில் அவர் அந்த ஐ. தே. க. கூட்டத்தில் தெரிவித்த கருத்துக்களை பார்ப் போம்:

"புலம்பெயர் தமிழர்கள் பலர் இலங்கையில் அபிவிருத்தி பணிகளுக்கு ஒத்துழைக்க விரும்புகின்றனர். எம்முடன் தொடர்புகொண்டு கலந்துரை யாடினர். குறிப்பாக, ஜனாதிபதி யின் அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்க புலம்பெயர் தமிழர்கள் ஆர்வமாக உள்ளனர். உண்மை யில், அவர்கள் நெருக்கடியான இந்த நிலையில் இலங்கைக்கு உதவுவதற்கு தயாராகவே உள்ளனர். சம்பிரதாயபூர்வ மான தமிழ் அரசியல் கட்சிகள் மீது புலம்பெயர் தமிழர்களுக்கு தற்போது நம்பிக்கை இல்லை. அவர்கள் அதனை விரும்பவும் இல்லை.

இலங்கையில் வாழும் தமிழர்களின் வாழ்வியலில் வள மான மாற்றத்தையே புலம் பெயர் தமிழர்கள் விரும்புகின்ற னர். வடக்கு, கிழக்கில் உள்ள இளையோரும் அதனையே கோருகின்றனர். எதிர்வரும் 27 மற்றும் 28ஆம் திகதிகளில் வடக்குக்கு மீண்டும் செல்லவுள் ளேன். எனவே, இந்த நேரத்தில் அனைவரையும் ஒன்றிணைத்து பயணிப்பது சிறந்தது' - இதுவே அவர் தெரிவித்தது.

பாலித ரங்கே பண்டார சில நாட்களுக்கு முன்னர் வவுனியா மற்றும் முல்லைத்தீவு ஆகிய இடங்களுக்கு வருகை தந்து தமது கட்சி ஆதரவாளர்களை சந்தித்திருந்தமை வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

எப்போதும் ஆட்சியில் உள்ளவர்கள் அல்லது அவர்க ளது கட்சிக்காரர்கள் வடக்கு, கிழக்குக்கு வந்தால் அவர்களு டன் தம்மை அறிமுகம் செய்து, அவர்களின் நட்பை பெறுவதற் காகவே சிலர் முண்டியடிப்பது வழக்கமானதுதான். அவர்கள் யார் ஆட்சியில் இருந்தாலும் அவர்களை வரவேற்பார்கள். அவ்வாறு அவரை வரவேற்றவர் கள் சொல்வதே சரியானது என்று நம்பிக்கொண்டு ஆட்சி யில் இருப்பவர்கள் எப்போதும் கருமமாற்றுவது வழமையானது தான்.

அதனால், எந்தப் பயனையும் இந்த நாடு பெற்றதாக இது வரை நாம் அறியவில்லை.

அவ்வாறு அவர் சந்தித்தவர் களில் ஒரு சிலர் புலம்பெயர் தமிழராகவும் இருந்திருக்கலாம். ஆனால், அவர்கள் யார், அவர்க ளால் எவ்வளவு முதலீடு செய்ய முடியும் என்பதை அவரால் இனம் காணமுடியாது என்ப தும் நாம் அறிந்ததுதான்.

இவ்வாறு அமைச்சர்கள், அதிகம் ஏன் ஜனாதிபதியைச் சந்தித்து அவருடன் படம் எடுத் துக்கொண்ட ஒருவர் பின்னர், அதனைக்காட்டியே பலரிடம் இலங்கையில் முதலீடு செய்ய வேண்டும் என்றால் தம்முடன் தொடர்புகொள்ளுமாறு பிரச ாரம் செய்ததும் அதனூடாக சில முறைகேடுகளில் ஈடுபட்ட தையும்கூட ஊர்க்குருவி அறிந்தி ருக்கின்றது.

அண்மையில், யாழ்ப்பாணத் தில் சிறிய முதலீடு ஒன்றை செய்வதற்காக யாழ்ப்பாணம் வந்திருந்த புலம்பெயர் தமிழர் ஒருவரை சந்திக்க முடிந்தது.

அவர் தனது யாழ்ப்பாணத் திலுள்ள வீட்டையே வர்த்தக நோக்கத்துக்காகப் பயன் படுத்தி, சிறியதாக ஒரு வர்த்தக முயற்சியை செய்ய விரும்பியி ருந்தார். அதற்காக சம்பந்தப் பட்ட உள்ளூராட்சி சபையில் விண்ணப்பித்து, அதற்கான அனுமதியைப் பெறுவதற்கே அதாவது தனது வீட்டை வர்த் தக நோக்கத்துக்கானதாக மாற்றுவதற்கே அவர் சுமார் ஒரு மாத காலத்தை செலவிட வேண்டிய வந்தது.

அந்த ஒரு மாதமும் அதற் காக அலைக்கழிந்த அந்த மனு சன் 'பிச்சை வேண்டாம் நாயைப்பிடி' என்ற கதையாக நாடு திரும்பிவிட்டார்.

இந்த இலட்சணத்தில் ஏதோ புலம்பெயர்ந்த தமிழர்கள் தன்னிடம் தொடர்புகொண்டு முதலிடுவதற்கு 'கியூ'வில் நிற்ப தாக பண்டார நம்பிக்கொண்டி ருப்பது வேடிக்கையானது.

அதுமட்டுமல்ல, சம்பிரதாய தமிழ் கட்சிகள்மீது புலம்பெயர் தமிழர்களுக்கு தற்போது நம் பிக்கை இல்லை என்றும் அவர் கண்டறிந்திருக்கிறார். பாரம் பரியமான ஐக்கிய தேசியக் கட்சியிலும்தான் நாட்டு மக்களே நம்பிக்கையிழந்தது அவருக்கு இப்போது ஞாபகம் இல்லையோ தெரியவில்லை.!

- ஊர்க்குருவி

# யாழ். பல்கலைக்கழகத்தில் அருங்காட்சியகம் திறப்புவிழா!

யாழ்ப்பாணம், மே 24

யாழ்ப்பாண பல்கலைக்கழ கத்தில் கலாநிதி கா. இந்திர பாலா தொல்லியல் அருங் காட்சியகம் திறப்பு விழாவும், இணையத்தளம் அங்குரார்ப் பணமும் இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு நடைபெற வுள்ளன.

கைலாசபதி கலையரங்கில் பல்கலைக்கழக வரலாற்று துறை தலைவர் திருமதி சாந் தினி அருளானந்தம் தலைமை யில் நடைபெறும் இந்த நிகழ்வில் ஓய்வுநிலை மூத்த பேராசிரியர் ப. புஷ்பரட்ணம் அறிமுக உரையையும் கலைப் பீட பீடாதிபதி பேராசிரியர் சி. ரகுராம் பீடாதிபதி உரை யையும் ஆற்றவுள்ளனர்.

இதைத் தொடர்ந்து, தொல்லியல் அருங்காட்சியக இணையத்தளம் தொடக்கி வைக்கப்படும். அடுத்து, யாழ். பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா உரையாற்று வார். இதன் பின்னர், கலாநிதி கா. இந்திரபாலா தொல்லியல் அருங்காட்சியகம் திறந்து வைக்கப்பட்டு கண்காட்சியும் நடைபெறும்.

யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் தொல்லியல் அருங் காட்சியகத்துக்கு வரலாற்று துறை பேராசான் கலாநிதி கா. இந்திரபாலாவே முதல் அடித் தளமிட்டார். இதனை நவீன அருங்காட்சியகமாக ஓய்வு நிலை பேராசிரியர் ப. புஷ்ப ரட்ணம் உருப்பெற செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# திருக்கேதீச்சரம் கொடியேற்றம் இன்று; யாழிலிருந்து கொடிச்சீலை சென்றது!





யாழ்ப்பாணம், மே 24

வரலாற்று சிறப்புமிக்கதும் பாடல் பெற்ற தலமுமான மன்னார் திருக்கேதீச்சரம் ஆலயத்தின் பெருந்திருவிழா இன்று புதன்கிழமை கொடி யேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

கொடியேற்றத்துக்கான கொடிச்சீலை பாரம்பரிய வழக்கத்தின்படி 40 வருடங் களின் பின்னர் யாழ்ப்பாணத் தில் இருந்து நேற்றுக் கொண்டு செல்லப்பட்டது.

கொடிச்சீலை உபயகார ரான திருநெல்வேலியை சேர்ந்த சண்முகநாதன் கபி லன் என்பவரின் வீட்டிலி ருந்து கொடிச்சீலை எடுத்து செல்லப்பட்டு, திருநெல் வேலி வெள்ளைப் பிள்ளை யார் ஆலயத்தில் வைத்து விசேட பூசை செய்யப்பட் டது. இதைத் தொடர்ந்து திருக்கேதீச்சரம் ஆலயத் துக்கு கொடிச்சீலை வாகனத் தில் எடுத்து செல்லப்பட்டது.

1982ஆம் ஆண்டுக்கு முன்னர், யாழ்ப்பாணத்தில் இருந்தே திருக்கேதீச்சரத்துக்கு கொடிச்சீலை வழங்கப்பட் டது. போர் காலத்தில் அது தடைப்பட்டது. இந்த நிலை யில், இந்த ஆண்டு முதல் பாரம்பரிய முறைப்படி செங்குந்த மரபினரால் கொடிச் சீலை வழங்கப்பட்டது. அண் மையில் கொடிச் சீலை உபய காரர்களுக்கான காளாஞ்சி வழங்கும் நிகழ்வு யாழ்ப்பா ணத்தில் நடைபெற்றிருந்தது. (ஐ)

# வடமராட்சி ஊடக இல்லத்துக்கு புதிய நிர்வாகம் தெரிவானது!

வடமராட்சி, மே 24

வடமராட்சி பிரதேசத்தை முழுமையாக உள்ளடக்கி செயல்பட்டு வரும் செய்தியா ளர்களை பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் "யாழ். வடமராட்சி ஊடக இல்லம்" செயல்பட்டு வருகின்றது.

இதன் புதிய நிர்வாக தெரிவு அண்மையில், பருத்த ித்துறை, விநாயக முதலியார் வீதியில் அமைந்துள்ள அதன் பணிமனையில் நடைபெற் றது.

இதில், மூத்த செய்தியாளர் சின்னத்துரை தில்லைநாதன் தலைவராகவும் இராஜரட் ணம் மயூதரன் செயலாளரா கவும் தங்கராசா காண்டீபன் பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர். அத்து டன், செல்வநாயகம் கிரிசாந் உப தலைவராகவும் சரவண பகவான் - சிறிகிருஸ்ணதரன் உப செயலாளராகவும் தெரி வாகினர். (ஐ-02)

# பிரித்தானிய தூதுவர் நேற்று யாழ். பல்கலைக்கு விஜயம்!



யாழ்ப்பாணம், மே 24

இலங்கைக்கான பிரித்தா னிய தூதுவர் சரா ஹூல்ரன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழ கத்துக்கு சம்பிரதாயபூர்வ விஜயமொன்றை மேற்கொண் டார்.

யாழ்ப்பாணத்துக்கு உத்தி யோகபூர்வ விஜயத்தை மேற் கொண்டுள்ள பிரித்தானிய தூ துவர் சரா ஹூல்ரன், இந்தியா மற்றும் இந்து சமுத்திரப் பிராந்தியத்துக்கான இயக்கு நர் பென் மெலோர் ஆகியோர் நேற்று முற்பகல் 11 மணியள வில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்துக்கு விஜயம் செய்தனர்.

இந்தச் சந்திப்பின்போது யாழ். பல்கலைக்கழகத்தின் சார்பில் துணைவேந்தர் பேரா சிரியர் சி. சிறிசற்குணராஜா, பதிவாளர் வி. காண்டீபன் ஆகியோரைச் சந்தித்துக் கலந் துரையாடினர்.

சமகால விவகாரங்கள், பிரித்தானியாவுக்கும், யாழ்ப் பாணப் பல்கலைக் கழகத்துக் கும் இடையிலான கல்வி சார் உடன்படிக்கைகள் பற்றிக் கேட்டறிந்த பிரித்தானியத் தூதுவர், யாழ்ப்பாணப் பல்க லைக்கழக மாணவர்களுக்கு இலவச மதிய உணவு வழங்கப் படும் சமூதாய சமையலறைக் கும் சென்று பார்வையிட்டார். (அ)

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
24.05.2023 புதன்கிழமை
சோபகிருது வருடம், வைகாசி 10

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

**E-mail: eelanaduweekly@gmail.com**
**தொலைபேசி : 021 205 2300**

# கிழக்கின் ஆளுநருக்கு முன்னாலுள்ள சவால்கள்?

கிழக்கு மாகாணம் ஏனைய மாகாணங்களிலிருந்து முற்றிலும் மாறுபட்டது. சிங்கள ஆட்சியாளர்களின் நரித்தனங்களால் கிழக்கு மாகாணம்போல் எந்தவொரு மாகாணமும் பாதிக்கப்படவில்லை. தமிழ் அரசியல் சமூகம் வடக்கு - கிழக்கை தங்களின் தாயக நிலமாக முன்னிலைப்படுத்தி வருகின்றது. அது, தமிழ்த் தேசிய அரசியலின் மையக் கோட்பாடாகவே இருக்கின்றது. தமிழர் தாயகத்தின் தலைநகராக திருகோணமலையை தமிழ் அரசியல் தலைமைகள் முன்னிறுத்தியிருந்தன.

இந்தப் பின்புலத்தில்தான் இணைந்த வடக்கு - கிழக்கு மாகாண சபையின் தலைநகராக திருகோணமலை தெரிவு செய்யப்பட்டது. இதேவேளை, இந்திய - இலங்கை ஒப்பந்தமும் வடக்கு - கிழக்கை தமிழ் பேசும் மக்களின் வரலாற்று வாழ்விடமென அங்கீகரித்தது. தமிழர் பக்கத்தில் இவ்வாறானதொரு நகர்வு இருப்பதை தெளிவாகப் புரிந்துகொண்ட சிங்கள ஆட்சியாளர்கள் - தமிழீழ கோட்பாட்டை யுத்தத்தின் மூலம் மட்டுமே அழித்துவிட முடியாதென்பதை சரியாக கணக்கிட்டதன் மூலம் - கிழக்கில் தமிழர்களை பலவீனப்படுத்துவதன் மூலம் தமிழரின் தாயகக் கோட்பாட்டை சிதைக்கும் வேலைத் திட்டத்தை தொடர்ச்சியாக முன்னெடுத்து வந்தனர்.

முதலில், திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களின் மூலம் தமிழர்களின் ஜனநாயக பிரதிநிதித்துவத்தை பலவீனப்படுத்தினர். இதில், முக்கியமாக திருகோணமலையில் பிரத்தியேக நிகழ்ச்சிநிரலை கொண்டிருந்தனர். திருகோணமலை ஒரு மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த இடம். கொழும்புக்கு நிகரான முக்கியத்துவத்தைப் பெற்றிருக்க வேண்டிய மாவட்டம். ஆனால், விடுதலைப் புலிகளின் இராணுவ பலத்தால் சிங்களத்தின் நிகழ்ச்சிநிரலை பிற்போட வேண்டியேற்பட்டது. இதற்கு ஒரு நல்ல உதாரணத்தை நோக்கலாம். விடுதலைப் புலிகளிடமிருந்து கிழக்கை விடுவித்த பின்னர் முதலில் திருகோணமலையில் முக்கியமான பகுதியான சம்பூரை ஆக்கிரமிப்பதற்கான முயற்சிகளையே மகிந்த அரசாங்கம் முன்னெடுத்தது. யுத்தத்தால் இடம்பெயர்ந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் அவர்களின் சொந்த இடங்களில் குடியேறுவதைத் தடுத்து அதனை பல நாடுகள் முதலீடுகளை மேற்கொள்கின்ற முதலீட்டு வலயமாக ஸ்தாபிக்க முயற்சித்தது.

2015இல் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதைத் தொடர்ந்தே அந்தத் திட்டம் கைவிடப்பட்டது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சம்பூர் மக்களின் குடியிருப்பு காணிகளை அவர்களுக்கே வழங்கினார். இதில், கூட்டமைப்பு ஒரு பிரதான வெற்றியைப் பெற்றிருந்தது. மகிந்தவின் ஆட்சியில் அங்கம் வகித்த தமிழர்களால் எதனையும் தடுத்து நிறுத்த முடியவில்லை.

இதேவேளை, கிழக்கு மாகாண தமிழர்களின் பலத்தை சிதைப்பதற்காக முஸ்லிம்களை பிரத்தாளுவதிலும் வெற்றிகரமாக செயல்பட்டது. இன்று குறிப்பாக, மட்டக்களப்பிலுள்ள தமிழர்கள், சிங்களவர்களை விடவும் முஸ்லிம்களை ஒரு போட்டியாளராக நோக்கும்போக்கே மேலோங்கியிருக்கின்றது. 2015இல், ஆட்சி மாற்றம் ஏற்பட்டதைத் தொடர்ந்து சிங்களவர்களோடு இணைந்து முதலமைச்சரை பெற வேண்டுமென்னும் கோரிக்கை கிழக்கில் படித்த சமூகத்தினரால் சம்பந்தனிடம் முன்வைக்கப்பட்டது. வடக்கு - கிழக்கு இணைப்புக்கு முஸ்லிம்களின் ஆதரவு தேவையென்று கூறி - வழமையான கதைகளையே சம்பந்தன் கூறிக் கொண்டிருந்தார்.

இன்றுவரையில், கல்முனை பிரதேச செயலகத்தின் பிரச்னையைத் தீர்த்து வைக்க எவராலும் முடியவில்லை. மக்கள் மத்தியில் ஏற்பட்ட அதிருப்தியின் காரணமாகவே கூட்டமைப்பு கடந்த பொதுத் தேர்தலில் அம்பாறையில் ஆசனத்தை இழந்துபோனது. இந்த அரசியல் பிரச்னைகள் கிழக்கின் ஆளுநருக்கு முக்கியமானதல்ல. ஆனால், மாகாண சபைக்கான அரசாங்கம் இல்லாத நிலையில் கிழக்கின் அனைத்து மக்களின் பிரச்னைகளையும் ஆளுநர் எவ்வாறு கையாளப் போகின்றார்?

கிழக்கின் ஆளுநர் முற்றிலும் வித்தியாசமான அரசியல் பின்புலத்தை கொண்டவர். ஓர் இந்து தமிழர். மலையக மக்களின் செல்வாக்கு மிக்க அரசியல் குடும்பத்தை சேர்ந்தவர், அவரின் பாட்டனாரும் ஆரம்பத்தில் செல்வநாயகம் தலைமையிலான தமிழ்த் தேசிய அரசியலுடன் இணைந்திருந்தவர். ஆனால், அவ்வாறானதோர் அரசியல் போக்கு மலையக மக்களின் எதிர்காலத்தை நாசமாக்கிவிடும் என்பதை தெளிவாக புரிந்துகொண்டு அவருக்கான தனி வழியில் சென்றவர். எனவே, முற்றிலும் மாறுபட்ட அரசியல் பின்புலத்தை கொண்டிருக்கும் ஆளுநரிடமிருந்து கிழக்கின் தமிழ் பேசும் இரு சமூகங்களும் அதிகம் எதிர்பார்க்கலாம். இவற்றை அவர் எவ்வாறு கையாளப் போகின்றார்? ஒருவேளை, கல்முனை பிரதேச செயலக பிரச்னையை அவரால் வெற்றிகரமாக தீர்த்து வைக்க முடிந்தால் அந்த மக்களின் மனதில் நீங்காத இடத்தை பெற்ற ஒருவராக அவர் பெயர் வரலாற்றில் நிலைபெறும். தான் வித்தியாசமானதோர் ஆளுநராக செயல்படப் போவதாகக் கூறுகின்றார். அந்த வித்தியாசம் என்ன என்பதை பார்போம்!


# சீனாவில் தமிழ்மொழிக்கு சிறப்பு அந்தஸ்து!

## தமிழ் பாடநூல் வெளியீடு










*சீனாவில் தமிழ் மொழிக்கு சிறப்பு அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது. அங்குள்ள பாடசாலைகளில் தமிழ் மொழி கற்பிக்கப்படுகின்றது. அதற்கான தமிழ் பாடநூல் கடந்த வாரம் வெளியிடப்பட்டுள்ளது*

*இன்று உலக நாடுகள் பலவற்றிலும் தமிழ் மொழிக்கு முக்கியத்துவம் வழங்கும் வகையில் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.*

*உலகளாவிய ரீதியில் பல பல்கலைக்கழகங்களில் தமிழ் மொழிக்கான துறைகள் காணப்படுகின்றன.*

*இந்த நிலையில் சீனாவின் முதலாவது சீன மொழி மூல அடிப்படை தமிழ் பாட நூல் வெளிவந்துள்ளது.இந்த நூலை சீன பேராசிரியர் நிறைமதி எழுதி உள்ளார்.*

*இந்த செயற்பாடானது தமிழையும் தமிழ் மக்களையும் பெருமைபடுத்தும் என அறிஞர்கள் கூறுகின்றனர்.*

*சீனாவின் யுன்னான் மிஞ்சு பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறைத் தலைவரும் பேராசிரியருமான நிறைமதி சீனமொழி மூலமான அடிப்படை தமிழ்பாட நூலை எழுதி உள்ளார்.*

*இந்த செயற்பாட்டின் மூலம் சீனாவில் தமிழ்மொழியை மாணவர்கள் இலகுவாக கற்றுக்கொள்ள முடியும் .*


*சீனாவில் மாணவர்கள் தமிழ் மொழியை ஒரு பாடமாக கற்று வருகின்றனர்.*

*இதற்கு முன்னர் பேராசிரியர் நிறைமதி எழுதிய “மலைகளை தாண்டி மதுரை பயணத்தில்”, “சீன பெண்ணின் பண்பாட்டு தேடல்” என்ற நூலும் இந்தியாவில்பெரும் வரப்பரப்பை பெற்றமை குறிப்பிடத்தக்கது.*

*தமிழ்மொழி மீது கொண்ட பற்று காரணமாக தனது இயற்பெயரையும் தமிழ் பெயராக மாற்றி கொண்டமை அனைவரது வரவேற்பையும் பெற்றுள்ளது.*

*உலகின் பல பாகங்களுக்கும் விஜயம் செய்யும் பேராசிரியர் நிறைமதி தமிழ் மொழி மீதான பற்று காரணமாக அந்த பிரதேசங்களின் பெருமைகளை தமிழ் மொழியில் நூல்களாக வெளியிடுவதும் காணொளியாக வெளியிடுவதும் குறிப்பிடத்தக்கது.* (அ)

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
துணிச்சலாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். வியாபாரத்தில் சில மாற்றங்கள் செய்வீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கருத்துக்கு ஆதரவு பெருகும். வெற்றிக்கு வித்திடும் நாள்.

**இடபம்**
இதுவரை இருந்த அலைச்சல் டென்ஷன் கோபம் யாவும் நீங்கும். வியாபாரத்தில் புது முதலீடு செய்வீர்கள். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். உற்சாகமான நாள்.

**மிதுனம்**
ராசிக்குள் சந்திரன் செல்வதால் வேலைச் சுமை இருந்து கொண்டே இருப்பதாக ஆதங்கப்படுவீர்கள். வியாபாரத்தில் லாபம் குறையும். திட்டமிட்டு செயல்பட வேண்டிய நாள்.

**கடகம்**
விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். வியாபாரத்தில் ஓரளவு லாபம் வரும். உத்தியோகத்தில் மேலதிகாரியுடன் மோதல்கள் வேண்டாம். கவனம் தேவைப்படும் நாள்.

**சிம்மம்**
எதிர்பார்ப்புகள் நிறைவேறும். வியாபாரத்தில் பழைய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். புகழ் கௌரவம் கூடும் நாள்.

**கன்னி**
அனுபவ பூர்வமாகவும் அறிவுப்பூர்வமாகவும் பேசி எல்லோரையும் கவர்வீர்கள். வியாபாரத்தில் உங்கள் கை ஓங்கும். உத்தியோகத்தில் அதிகாரியின் நம்பிக்கையை பெறுவீர்கள். சாதிக்கும் நாள்.

**துலாம்**
கணவன் - மனைவிக்குள் இருந்த மனப்போர் நீங்கும். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். வியாபாரத்தில் போட்டிகள் குறையும். மேலதிகாரி மதிப்பார். மகிழ்ச்சியான நாள்.

**விருட்சிகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் மற்றவர்களை நம்பி எந்த பொறுப்புகளையும் ஒப்படைக்க வேண்டாம். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களிடம் கனிவாகப் பழகுங்கள். பொறுமைத் தேவைப்படும் நாள்.

**தனுசு**
உங்கள் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். கல்யாணப் பேச்சு வார்த்தை வெற்றியடையும். மேலதிகாரி உங்களை நம்பி சில பொறுப்புகளை ஒப்படைப்பார். திறமைகள் வெளிப்படும் நாள்.

**மகரம்**
குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பு கூடும். வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்கும். உத்தியோகத்தில் உங்களின் புதிய முயற்சிகளை அதிகாரி பாராட்டுவார். தொட்டது துலங்கும் நாள்.

**கும்பம்**
புதிய முயற்சிகள் வெற்றியடையும். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். வேற்றுமதத்தவர் உதவுவார். வியாபாரத்தில் புது கடையை மாற்றுவீர்கள். கனவு நனவாகும் நாள்.

**மீனம்**
எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒரு வேலை முடியும். வியாபாரத்தில் அதிரடி சலுகைகள் மூலம் லாபமடைவீர்கள். எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். உயர்வு பெறும் நாள்.

# இந்திய எல்லைக்குள் நுழைந்த 5 இலங்கை மீனவர்கள் கைது!

சென்னை, மே 24

இந்திய பெருங்கடலில் அத்துமீறி நுழைந்த விசைப்படகை பிடித்த கடலோர காவல் படையினர் ஐந்து இலங்கை மீனவர்களை கைது செய்தனர். அத்துடன், அவர்களிடமிருந்து 150 கிலோ மீன்களையும் பறிமுதல் செய்துள்ளனர்.

கன்னியாகுமரி கடல் பகுதியில் வைத்தே இந்த மீனவர்கள் கைது செய்யப்பட்டனர். பெனில், விக்ரர், இமானுவல், அன்ரனி ஜெயராஜா, ரஞ்சித், ஆனந்தகுமார் ஆகிய மீனவர்களே கைது செய்யப்பட்டனர். இவர்கள் நீர்கொழும்பை சேர்ந்தவர்கள் என்று அறிய வந்துள்ளது.

இவர்கள் ஐவரும் கடந்த 17ஆம் திகதி இலங்கையிலிருந்து புறப்பட்டனர் என்றும் அறிய வந்துள்ளது. கைதான மீனவர்கள் உண்மையில் மீன் பிடிக்க வந்தார்களா அல்லது கடத்தல் வேலைகளில் ஈடுபட முனைந்தனரா என்ற கோணத்தில் பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ஐ)

# ரூ. 2.95 இலட்சம் கோடியை முதலீடாக ஈர்த்துள்ளோம்!

## முதலமைச்சர் ஸ்டாலின்

சென்னை, மே 24

தி. மு. க. ஆட்சி பொறுப்பேற்ற பிறகு கடந்த 2 ஆண்டுகளில் 2.95 இலட்சம் கோடி (இந்திய) ரூபாய் முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளன என்று முதல்வர் மு. க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

புதிய தொழில் முதலீடுகளை ஈர்க்கும் விதமாகவும், அடுத்த ஆண்டு நடைபெறும் உலக முதலீட்டாளர்கள் மாநாட்டுக்கு பல்வேறு தொழில் நிறுவனங்களுக்கு அழைப்பு விடுக்கும் வகையிலும், முதல்வர் ஸ்டாலின் நேற்று சிங்கப்பூர், ஜப்பான் நாடுகளுக்கு புறப்பட்டுச் சென்றார்.

முன்னதாக சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், "ஜனவரி மாதம் சென்னையில் நடைபெறவுள்ள உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் கலந்து கொள்ள வேண்டும் என்று பல்வேறு நாடுகளுக்கு சென்று அழைப்பு விடுத்துக் கொண்டிருக்கிறோம். அந்த வகையில் உலக முதலீட்டாளர் மாநாட்டுக்கு அழைப்பு விடுக்க 9 நாட்கள் பயணமாக ஜப்பான், சிங்கப்பூர் நாடுகளுக்கு இந்த பயணத்தை மேற்கொண்டு இருக்கிறேன். என்னுடன் தொழில் துறை அமைச்சர், அரசு உயர் அதிகாரிகள் வருகிறார்கள்.

இந்த பயணத்தின் போது ஒரு சில புதிய ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படவுள்ளன. இந்த பயணத்தின் முக்கிய நோக்கம் வரும் ஜனவரி நடைபெற உள்ள உலக முதலீட்டாளர்களை மாநாட்டுக்கு அழைப்பு விடுப்பதுதான். உங்களின் வாழ்த்துகளுடன் செல்கிறேன்.

கடந்த ஜனவரியில் மேற்கொண்ட துபாய் பயணத்தின் மூலம் 6000 கோடி (இந்திய) ரூபாய் முதலீடுகள் ஈர்க்கப்பட்டன. துபாய் பயணத்தின் போது ஒப்பந்தமான 6 நிறுவனங்கள் பணிகளை தொடங்கிவிட்டன. தி. மு. க. ஆட்சி பொறுப்பேற்ற பிறகு கடந்த ஆண்டுகளில் இரண்டு லட்சத்து 95 ஆயிரம் கோடி முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளன. இதன் மூலம் நான்கு இலட்சத்து 65 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு நிச்சயமாக கிடைக்கும்- என்றார். (ஐ)

# தமிழக மக்களை அழிப்பதற்கு பெயர்தான் 'திராவிட மொடல்'

## பன்னீர்செல்வம் விமர்சனம்

சென்னை, மே 24

தமிழக மக்களை அழிப்பதற்கு பெயர்தான் திராவிட மொடல் ஆட்சி போலும் என ஓ. பன்னீர்செல்வம் கூறியுள்ளார்.

நேற்று அவர் விடுத்த அறிக்கையில், "தன்னலத்துக்காக தமிழகத்தில் உள்ள மதுபான கடைகளில் கூடுதல் விலைக்கு மது விற்பனை செய்து, கள்ளச் சாராய கலாசாரத்தை உருவாக்கி, தமிழக மக்களை படிக்க வைப்பதற்குப் பதிலாக குடிக்க வைத்து தமிழ் குடியை அடியோடு ஒழிக்கும் நடவடிக்கைகளை எடுத்துவரும் தி. மு. க. அரசுக்கு கடும் கணடனம் மதுக் கடைகளில் மிகப் பெரிய குளறுபடி, மிகப் பெரிய ஊழல் தலைவிரித்து ஆடுகிறது. தமிழக மக்களை அழிப்பதற்கு பெயர்தான் "திராவிட மொடல்" ஆட்சி போலும்! தமிழ்க் குடியை கெடுக்க வந்த தி. மு. க. அரசுக்கு அ. தி. மு. க. சார்பில் கடும் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த இரண்டு ஆண்டு கால தி. மு. க. ஆட்சியில் ஒரு குடும்பத்தின் வருவாய் அதிகரிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது என்ற எண்ணம் மக்கள் மத்தியில் தோன்றியுள்ளது. இது வழிப்பறி கொள்ளைக்கு சமம்.

நீதி தவறி ஆட்சி நடத்தும் மன்னன், மக்களையும், பொருளையும் ஒரு சேர இழப்பான் என்ற வள்ளுவரின் வாய்மொழிக்கேற்ப, விபரீத ஆட்சி வீழும் நாள் வெகு தொலைவில் இல்லை - என்றுள்ளது. (ஐ)

# ஸ்டாலினை பதவி விலக வலியுறுத்தி தமிழ்நாடு முழுவதும் போராட்டம்

## அ. தி. மு. க. கட்சி அறிவிப்பு

சென்னை, மே 24

தமிழகத்தில் ஊழல், கள்ளச்சாராய இறப்புகள் தொடர்வதால் அதற்கு பொறுப்பேற்று முதல்வர் ஸ்டாலின் பதவி விலகக் கோரி 29ஆம் திகதி அனைத்து மாவட்டங்களிலும் ஆட்சியர் அலுவலகங்கள் முன்பு கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடைபெறும் என்று அ. தி. மு. க. பொதுச்செயலாளர் பழனிசாமி அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில், தமிழகத்தில் நடைபெற்று வரும் பல்வேறு ஊழல்களையும், வன்முறைச் சம்பவங்களையும் தடுத்து நிறுத்துவதற்கான உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல், பல்வேறு வகைகளில் தன் குடும்பத்தை வளப்படுத்தும் வேலைகளில் மட்டுமே முதல்வர் ஸ்டாலின் ஈடுபட்டு வருகிறார். மக்களுக்கு சேவை செய்ய வேண்டிய திமுக ஆட்சியின் அமைச்சர்களோ, வாக்களித்த மக்களை கேலியும், கிண்டலும் செய்து, மிரட்டும் வகையிலும் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்.

தமிழ் நாட்டில் ஊழல் நடவடிக்கைகள் மற்றும் நிர்வாகத் திறமையின்மை ஆகியவற்றால், மாநிலத்தின் சட்டம்-ஒழுங்கு நிலைமை கடுமையாக சீர்குலைந்துள்ளது. மாநிலத்தில் மனித உரிமைகள் கடுமையாக மீறப்படுவதற்கு ஆளும் தி. மு. க. அரசே பொறுப்பாகும். கடந்த ஒரு வாரத்தில், 25 பேர் கள்ளச் சாராயத்தால் இறந்தனர். இதற்கு முக்கிய காரணம், ஆளும் கட்சியினர் கள்ளச் சாராய விற்பனையில் நேரடியாக ஈடுபட்டுள்ளதே.

தமிழகத்தில் தொடரும் ஊழல் முறைகேடுகள், கள்ளச் சாராயம், போலி மதுபானங்களால் ஏற்படும் சட்டம் - ஒழுங்கு சீர்கேடுகளை கட்டுப்படுத்தத் தவறிய தி. மு. க. அரசைக் கண்டித்தும், இவற்றுக்கு முழுப் பொறுப்பேற்று முதல்வர் ஸ்டாலின் உடனடியாக பதவி விலக வலியுறுத்தியும் அ. தி. மு. க. சார்பில் கட்சி ரீதியிலான அனைத்து மாவட்டங்களிலும் வரும் 29ஆம் திகதி காலை 10 மணிக்கு மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடைபெறும் - என்றுள்ளது. (ஐ)

# தாவரவியல் பூங்காக்களுக்கான நுழைவு கட்டணங்கள் அதிகரிப்பு

கொழும்பு, மே 24
தாவரவியல் பூங்காகளுக் கான நுழைவுக் கட்டணத்தை ஜூலை முதலாம் திகதி முதல் அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட் டுள்ளது.

சுற்றுலா மற்றும் காணி அமைச்சர் ஹரின் பெர்னாண் டோவினால் வெளியிடப்பட் டுள்ள விசேட வர்த்தமானி அறி வித்தலில் இது மஉறிப்பிடப் பட்டுள்ளது.

குறித்த வர்த்தமானி அறிவித் தலின் பிரகாரம், 12 வயதுக்கு மேற்பட்ட இலங்கையர்கள் மற்றும் சிறுவர்கள் மற்றும் பெரி யவர்களுக்கு அறவிடப்படும் கட்டணம் 200 ரூபாவாகும்.

12 வயதுக்குட்பட்ட குழந் தைகள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு ரூ.30, 60 வய துக்கு மேற்பட்டவர்களுக்கு ரூ.50 மட்டுமே வசூலிக்கப்படும்.

இது தவிர, வெளிநாட்டின ருக்கான நுழைவுக் கட்டணம் ரூ.3,000 ஆக மாற்றியமைக்கப் பட்டுள்ளது.

12 வயதுக்குட்பட்ட வெளி நாட்டு சிறுவர்களுக்கு 1,500 ரூபாவும், வெளிநாட்டுப் பாட சாலை மாணவர்கள் மற்றும் வெளிநாட்டு பல்கலைக்கழக மாணவர்களுக்கான கட்டணம் 2,000 ரூபாவாகவும் அறவிடப்ப டும் என வர்த்தமானி அறிவித்த லில் மேலும் தெரிவிக்கப்பட் டுள்ளது.

(அ)

# பேராதனை பல்கலைகழக மாணவியை காணவில்லை

கொழும்பு, மே 24
பேராதனை பல்கலைக்கழ கத்தின் கலைப்பீடத்தில் 03ஆம் ஆண்டில் கல்வி கற்கும் மாணவி ஒருவர் காணாமல்போயுள்ளதாக பேராதனை பொலிஸில் முறைப் பாடு செய்யப்பட்டுள்ளது.

பேராதனை பல்கலைக்கழக அக்பர் விடுதியில் தங்கியிருக் கும் இம்மாணவி அம்பாறை-செருகம-வேரங்கட்டிகொட பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்டவர்.

அவர் விடுதியில் இல்லை என விடுதியின் பிரதி அதிபர் பேராதனை பொலிஸில் முறைப் பாடு செய்துள்ளார்.

எவ்வாறாயினும், காணாமல் போன மாணவியின் கையடக் கத் தொலைபேசிக்கு பல்கலைக் கழகத்தின் ஒழுக்காற்று அதிகாரி ஒருவர் அழைப்பு விடுத்து அவர் குருநாகல் பிரதேசத்தில் இருந்தார் என பொலிஸ் விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் பேரா தனை பொலிஸார் மற்றும் பேரா தனை பல்கலைக்கழக பாதுகாப் புப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (அ)

# உலக வங்கி நிதி ஒதுக்கீட்டில் மருந்து தட்டுப்பாட்டுக்கு தீர்வு

கொழும்பு, மே 24
வைத்தியசாலைகளில் நில வும் மருந்து தட்டுப்பாட்டை உலக வங்கியின் நிதி ஒதுக்கீட் டின் கீழ் நிவர்த்திக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஆதார வைத்தியசாலைகளில் தற்போதும் சில மருந்து பொருட் களுக்கான தட்டுப்பாடு நிலவுவ தாக சுகாதார அமைச்சின் அடிப் படை சுகாதார சேவைகள் பிரி வின் உலக வங்கியின் செயற் றிட்ட பணிப்பாளர் வைத்தியர் ஜயசுந்தர பண்டார தெரிவித்தார்.

இந்த நெருக்கடியை நிவர்த் திப்பதற்காக சுகாதார அமைச் சின் கோரிக்கைக்கு அமைய உலக வங்கியின் ஒதுக்கீட்டின் கீழ் தேவையான நடவடிக்கை கள் முன்னெடுக்கப்பட்டுள்ள தாக அவர் குறிப்பிட்டார்.

(அ)

# கனடா பிரதமரின் கருத்து கண்டிக்கப்படவேண்டியது

## சபையில் பெரமுன விசனம்

கொழும்பு, மே 24

**இலங்கையில் உள்நாட்டுப் போரின்போது தமிழ் இனப்படுகொலை இடம்பெற்றதாகக் கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அண்மையில் தெரிவித்த கருத்து கண்டிக்கப்படவேண்டியது என பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் சமன்பிரிய ஹேரத் தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய அவர்-

இலங்கையில் போரின்போது தமிழர் இனப்படுகொலை நடந் ததாக கனடா பிரதமர் கூறியுள் ளார். இலங்கையில் நடந்த போரின் விளைவாக சிங்களவர் களும், தமிழர்களும், முஸ்லிம்க ளும் பாதிக்கப்பட்டதை நாம் அனைவரும் அறிவோம்.

ஆனால், இலங்கை இராணு வம் தமிழ் சமூகத்துடன் போரில் ஈடுபடவில்லை என்றே கூற வேண்டும். அந்தச் சூழ்நிலையில், கனடா பிரதமரின் கருத்துக்கு பாராளுமன்றம் கண்டனம் தெரிவிக்க வேண்டும் என்று நான் பரிந்துரைக்கிறேன்-என் றார்.

கனடா பிரதமர் கடந்த 17ஆம் திகதி வெளியிட்ட கருத்து தொடர்பில் இலங்கையின் பல்வேறு தரப்பினரும் தமது எதிர்ப்பை வெளியிட்டனர்.



இதனையடுத்து நேற்று முன் தினம் காலை கனேடிய தூதர கத்துக்கு முன்பாக பலாங்கொடை கஸ்ஸப தேரர் உள்ளிட்டோர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டது டன், இலங்கையில் உள்நாட் டுப் போரின்போது விடுதலைப் புலிகள் அமைப்பினால் மேற் கொள்ளப்பட்டதாகக் கூறப்ப டும் கொலைகள் அடங்கிய பட்டியலைக் கையளித்தனர்.

(அ)

# பலாப்பழ விலையால் தகராறு; ஹோட்டல் உரிமையாளர் கொலை

கொழும்பு, மே 24
இரத்மலானை-காலி வீதியில் உள்ள ஹோட்டல் ஒன்றில் இடம்பெற்ற கத்திக்குத்துச் சம் பவத்தில் நபர் ஒருவர் உயிரிழந் துள்ளார்.

பலாப்பழம் விற்பனை செய் யும் ஒருவருக்கும் குறித்த ஹோட் டலின் உரிமையாளருக்கும் இடையில் விலை தொடர்பில் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த வாக்குவாதத்தில் சந் தேகநபர் கத்தியால் தாக்கியதன் காரணமாக ஹோட்டலின் உரி மையாளர் சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் 29 வயதுடைய ஹபுகஸ்தலாவ பிரதேசத்தை சேர்ந்தவர் என தெரியவந்துள் ளது.

கொலையுடன் தொடர்பு டைய சந்தேகநபர் அடையா ளம் காணப்பட்டுள்ளதுடன், அவரை கைது செய்வதற்கான விசாரணைகளை கல்கிஸை பொலிஸார் மேற்கொண்டுள்ள னர். (அ)

# இந்து சமுத்திரத்தில் மூழ்கிய சீன கப்பல்; 7 பேரின் உடல்களை மீட்ட சுழியோடிகள்

கொழும்பு, மே 24
இந்து சமுத்திரத்தில் மூழ்கிய சீன மீன்பிடிக் கப்பலில் இருந்து ஏழு பேரின் உடல்களை இலங் கைச்சுழியோடிகள் மீட்டுள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை 39 பேருடன் மூழ்கிய மீன்பிடிக் கப்பலில் இருந்தே ஏழு பேரின் சடலங்களை இலங்கைச் சுழி யோடிகள் மீட்டுள்ளனர்.

கப்பலின் கபின் பகுதியில் இலங்கைச் சுழியோடிகள் உடல் களை கண்டுபிடித்தனர் என சீன ஊடகங்கள் செய்தி வெளி யிட்டுள்ளன.

(அ)

# போதகர் ஜெரோம் பெர்னாண்டோ நாட்டை விட்டு ஓட உதவியது யார்?

## சஜித் பிரேமதாஸ கேள்வி

கொழும்பு, மே 24
போதகர் ஜெரோம் பெர்னாண்டோ நாட்டை விட்டு வெளியேறுவதற்கு தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள போதிலும், அவர் யாருடைய ஆதரவுடன் நாட்டை விட்டு வெளியேறினார் என்பதை அர சாங்கம் வெளிப்படுத்தவேண்டு மென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தி யுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள விசேட அறிக்கையிலேயே இவ் வாறு வலியுறுத்தியுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரி வித்துள்ளதாவது:

தூய பௌத்தத்தை உறுதி யாக நம்பி, பௌத்தத்தை நிலை நிறுத்த அர்ப்பணிப்புடன் செயல் படுத்துகின்ற ஒரு நடைமுறை பௌத்தன் என்ற முறையில், இந்த போதகரின் தீய கூற்றுக்கு நான் மிகவும் வருந்துகிறேன்.

நல்லிணக்கம், சகோதரத்து வம், மனித நேயம் ஆகியவை முன்னரைவிடவும் எதிர்காலத் தில் வலுவாக கட்டியெழுப்பப் பட வேண்டிய காலகட்டத்தில் நாம் வாழ்கிறோம்.

இதுபோன்ற பொறுப்பற்ற அறிக்கைகளால் மத மோதல் கள் மற்றும் வெறுப்பு உருவாகும் அபாயம் உள்ளது.

இந்த நாடு நீண்ட காலமாக தூய பௌத்தத்தால் போஷிக் கப்பட்டு வருகிறது, பௌத்தம் ஒரு உலகளாவிய மதம். இது எந்த மதத்திற்கோ தேசத்திற்கோ சொந்தமில்லாத ஒரு உலகளா விய மதம்.

இதேவேளை, தன்னிச்சையாக கருத்து தெரிவித்த போதகர் ஜெரோம் பெர்னாண்டோ



நாட்டை விட்டு வெளியேறத் தடை விதிக்கப்பட்டபோதும் அவர் யாருடைய ஆதரவுடன் நாட்டை விட்டு வெளியேறி னார் என்பதை வெளிக்கொண ரவேண்டும்.

சமூகத்தில் நடக்கும் இத்த கைய கொடுமைகளை வெளிக் கொணர வேண்டும். நாட்டில் இனங்கள் மற்றும் மதங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தை முடக்கும் வகையில், முழு நாடும் தீவிர ஆய்வுக்கு உட்படுத்தப்பட் டுள்ளது என்பதை நினைவில் கொள்ளவேண்டும்-என்றுள்ளது.

(அ)

# சங்கானையில் டெங்கு ஒழிப்பு

யாழ்ப்பாணம், மே 24
யாழ்.மாவட்டத்தில் அதிகரித்து வரும் டெங்கு நோயைக் கட்டுப்படுத்தும் நோக்கில் சங்கானைப் பகுதியில் டெங்கு நுளம்பு களை கட்டுப்படுத்தும் செயற்றிட்டம் நேற்று முன்னெடுக்கப்பட்டது.



சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக் குட்பட்ட ஜே/179 , ஜே/181 கிராமசேவகர் பிரிவில் டெங்கு நுளம்பு ஒழிப்பு செயற்றிட் டம் முன்னெடுக்கப்பட்டது.

இதில், சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி பிரவைச்சேர்ந்த சுகாதாரப் பரிசோதகர்கள், வலிகாமம் மேற்கு பிரதேச சபையினர் கலந்துகொண்டு டெங்கு நுளம்புப் ஒழிப்புச் செயற்றிட்டத்தை முன் னெடுத்தனர். (அ)

# அபிவிருத்திப் பணிகள் எதுவுமே நடைபெறாது

## அமைச்சர் பந்துல சபையில் திட்டவட்டம்

கொழும்பு, மே 24

**வீதிகள், பாலங்கள் என்பன வெளிநாட்டு நிதியுதவியிலேயே நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. கடன் மறுசீரமைப்பு மேற்கொள்ளும் வரை நிதியுதவிகள் கிடைக்காததால் அபிவிருத்திப் பணிகள் நடக்காது என போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.**

நேற்று பாராளுமன்றத்தில் எழுப்பப்பட்ட கேள்வியொன்றுக்கு பதிலளித்தபோதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-



ஒப்பந்தக்காரர்களுக்கு 87 பில்லியன் ரூபா வழங்கவேண்டும். தெற்கு அதிவேக நெடுஞ்சாலை அபிவிருத்திப் பணத்தை சீனாவின் எக்சிம் வங்கி இடைநிறுத்தியுள்ளது. அந்த அபிவிருத்தியை மேற்கொண்ட தனியார் நிறுவனம் 150 மில்லியன் டொலர் செலவிட்டுள்ளது. இனிமேலும் தம்மால் செலவிட முடியாதென அறிவித்துள்ளனர்.

நாங்கள் கடன் மறுசீரமைப்பை மேற்கொள்ளும் வரை வெளிநாட்டு கடன் உதவியாளர்கள் பணம் தரமாட்டார்கள். நாங்கள் நடுவீதியில் படுத்திருந்தாலும் அவர்கள் பணம் தரமாட்டார்கள்-என்றார். (அ)

# அடர்ந்த காட்டுக்குள் திருமணம் செய்த ஜோடி





கொழும்பு, மே 24

பதவியா பகுதியில் உள்ள விவசாயி ஒருவர் தனது மகனின் திருமண வைபவத்தை கடந்த 21ஆம் திகதி அடர்ந்த காடு ஒன்றின் மத்தியில் நடத்தினார்.

பதவியா-புல்மோட்டை வீதி, உறுவ பிரதேசத்தில் இருந்து இரண்டு கிலோமீற்றர் தொலைவில், கொஹொம்பபிட்டிய குளத்துக்கு அருகில் திருமண ஏற்பாடு செய்யப்பட்டது.

மணமகனும், மணமகளும் அமர்ந்திருந்த நாற்காலியும் காட்டில் கிடைத்த பொருட்களைக் கொண்டு அழகாக அமைக்கப்பட்டிருந்தது.

மணமகன் சிறிபுரவில் வசிக்கும் நடுன் சதுரங்க, மணமகள் கொலோங்கொல்ல தசாஞ்சலி.

இந்த திருமண விழாவில் டோலக், தபேலா மற்றும் பியானோவைப் பயன்படுத்தி மெல்லிசை இசைக்கப்பட்டது. பெரிய சத்தமாக இசை ஒலிக்கவிடப்படவில்லை.

காடுகளை நேசிக்கும் விவசாயியான மணமகனின் தந்தை சமந்த பிரேமலால் தனது மகனின் திருமண விழாவை இவ்வாறு காட்டின் நடுவில் நடத்த ஏற்பாடு செய்தார்.

காடுகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் இது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்த திருமண விழாவில் இருதரப்பையும் சேர்ந்த சுமார் 300 உறவினர்கள் கலந்துகொண்டனர். (அ)

# தேர்தலை நிறுத்தியாவது நாட்டை நிமிர்த்தி இருக்கிறார் ஜனாதிபதி!

## மொட்டு கட்சி எம்.பி. பாராட்டு

கொழும்பு, மே 24

“ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேர்தலை நிறுத்தியாவது ஓரளவாவது இந்த நாட்டை நிமிர்த்தி இருக்கின்றார்” - என்று பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சி தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்-

உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடத்தப்படுவதை நாம் எதிர்க்கவில்லை. இப்போதும் மொட்டுக் கட்சி என்ற அடிப்படையில் நாம் தேர்தலுக்குத் தயாராகவே உள்ளோம்.

ஆனால், நிதி அமைச்சராக இருக்கின்ற ஜனாதிபதி அதற்குப் பணமில்லை என்கிறார். எம்மால் ஒன்றும் செய்ய முடியாது.

தேர்தலை நிறுத்தியாவது ரணில் ஓரளவாவது இந்த நாட்டை நிமிர்த்தி இருக்கின்றார். அதை நாம் ஆதரித்தே ஆக வேண்டும். அதைவிடுத்து விமர்சனங்களை முன்வைப்பதை நாம் தவிர்க்க வேண்டும்-என்றார்.

# உள்ளாடைக்குள் ஹெரோயின் பருத்தித்துறைச் சிறுமி கைது!

யாழ்ப்பாணம், மே 24

பருத்தித்துறையில் 5.5 கிராம் ஹெரோயினுடன் 16 வயது சிறுமி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்.முகாமில் கடமையாற்றிய பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து நேற்று முன்தினம் இரவு மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சிறுமி கைது செய்யப்பட்டார்.

பருத்தித்துறை, காந்தியூர் பகுதியில் உள்ள வீடொன்று சோதனையிடப்பட்டது. விசேட அதிரடிப்படையின் பெண் உத்தியோகத்தர்கள், வீட்டிலிருந்த 16 வயதுடைய சிறுமியை சோதனையிட்டபோது, அவர் உள்ளாடைக்குள் சூட்சுமமாக ஹெரோயின் போதைப்பொருளை மறைத்து வைத்திருந்தமை தெரிய வந்தது.

சிறுமி பருத்தித்துறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

அவர் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

பருத்தித்துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# இத்தாலி விபத்தில் இலங்கையர் பலி!

கொழும்பு, மே 24

இத்தாலியின் பெகர்மோவில் இடம்பெற்ற வாகன விபத்தில் இலங்கையர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பெகர்மோவில் வாழ்ந்து வந்த வர்ணகுலசூரிய சஞ்சீவ பிரதீப் பெர்னாண்டோ என்ற 45 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்துள்ளார்.

சஞ்சீவ பிரதீப் தனிப்பட்ட நோக்கத்திற்காக சைக்கிளில் பயணித்தபோது அதே திசையில் சென்ற பெரிய லொறியில் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பேர்கம போக்குவரத்து பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்தில் படுகாயமடைந்த சஞ்சீவ பிரதீப் அவசர அம்புலன்ஸ்கள் சம்பவ இடத்தை நெருங்கும் முன்பே உயிரிழந்ததாக பொலிஸார் கூறினர்.

உயிரிழந்த சஞ்சீவ பிரதீப் இலங்கையின் மாரவில பிரதேசத்தை வசிப்பிடமாக கொண்டவர். அவர் 20 ஆண்டுகளுக்கும் மேலாக இத்தாலியில் தனது குடும்ப உறுப்பினர்களுடன் வாழ்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# உயரம் குறைந்த சிறுவர்களின் எண்ணிக்கை நாட்டில் உயர்வு

கொழும்பு, மே 24

இலங்கையில் உயரம் குறைந்த சிறுவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த 2021ஆம் ஆண்டில் 5 முதல் 10 வயது வரையிலான சிறார்கள் மத்தியில் உயரம் குறைந்தவர்கள் எண்ணிக்கை 21 வீதமாக காணப்பட்டது.

எனினும், கடந்த 2022ஆம் ஆண்டில் இந்த எண்ணிக்கை 26 வீதமாக உயர்வடைந்துள்ளது.

மந்த போசனைக்கு உள்ளான சிறுவர் சிறுமியரே இவ்வாறு உயரம் குறைவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

உயரம் குறைவது பொதுவாக போசாக்கின்மை பிரச்னைகளினால் ஏற்படுவது எனவும், இதனால் மூளை வளர்ச்சியும் பாதிக்கப்படும் எனவும் உலக உணவுத் திட்டத்தின் இணைப்புச் செயலாளர் டொக்டர் கலன பீரிஸ் தெரிவித்தார்.

பிள்ளையொன்றின் வளர்ச்சியில் முதல் ஆயிரம் நாட்கள் மிகவும் முக்கியமானது எனவும், அதன் அடிப்படையில் அடுத்த 7000 நாட்களில் கிரமமான வளர்ச்சி இருக்கவேண்டுமெனவும் அவர் கூறினார். (அ)

# ஜனாதிபதித் தேர்தலுக்குப் பணம் உண்டு உள்ளூராட்சி தேர்தலுக்குப் பணம் இல்லை

## இது நகைச்சுவை என்கின்றது சஜித் அணி

கொழும்பு, மே 24

“ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்குப் பணம் உண்டு. உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவதற்குப் பணம் இல்லை. இதுவொரு நகைச்சுவை” - என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்-

உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்தாமை சர்வதேச மட்டத்தில் கடன் பெறுவதில் சிக்கலை ஏற்படுத்தும். சர்வதேச நாணய நிதியம் உள்ளிட்ட ஏனைய நிதி நிறுவனங்கள், நாடுகள் இந்த விடயத்தை உன்னிப்பாக அவதானிக்கும்.

ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்குப் பணம் உண்டு. உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவதற்குப் பணம் இல்லை. இதுவொரு நகைச்சுவை. இதைச் சர்வதேச நாடுகள் உன்னிப்பாக அவதானிக்கும்.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தைக் கொண்டுவர வேண்டாம் என்று உலக நாடுகள் கூறுகின்றன. அது அந்தளவு ஆபத்தானது. ஜனநாயகத்துக்கு விரோதமானது.

ரணில் விக்கிரமசிங்க தேசியப்பட்டியல் ஊடாக எம்.பியாகுவதற்கு முன்பிருந்தே சர்வதேச நாணய நிதியத்திடம் செல்லுமாறு இந்த அரசிடம் கூறி வந்தோம். அப்போது சென்றிருந்தால் நிபந்தனை கடுமையாக இருந்திருக்காது.

நாடு வங்குரோத்து நிலையை அடைந்த பின் செல்வதால்தான் நிபந்தனை கடுமையாக உள்ளது. அதை மக்களால் தாங்கிக்கொள்ள முடியாது. நாம் ரணில் செய்கின்ற எல்லாவற்றையும் எதிர்க்கும் எதிர்க்கட்சி கிடையாது-என்றார். (அ)

# பராமரிப்பின்றி காணப்படும் காணிகளின் உரிமையாளர்கள் மீது சட்ட நடவடிக்கை

## மன்னார் அரச அதிபர் அறிவிப்பு

மன்னார், மே 24

மன்னார் மாவட்டத்தில் டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்து வருவதால் பராமரிப்பின்றி காணப்படும் காணி உரிமையாளர்கள் தங்களது காணிகளை துப்பரவு செய்து சுகாதாரத்துறையினருக்கு உதவி புரியவேண்டும். அவ்வாறு உதவி செய்ய முன் வராவிட்டால் காணி உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என மன்னார் மாவட்ட அரச அதிபர் அ.ஸ்ரான்லி டி மெல் தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்டத்தில் டெங்கு நோயின் தாக்கம் தொடர்பாக உயர் மட்ட அதிகாரிகளுடன் நேற்று முன் தினம் மாலை மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்துச் சென்று கொண்டிருக்கையில் மன்னார் மாவட்டத்தில் 5 மாதங்களில் 61 நோயாளர்கள் டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அதனைத் தொடர்ந்து டெங்கு நுளம்புகளின் ஆய்வுகளின் அடிப்படையிலும் நோயாளர்கள் இனங்காணப்பட்ட பிரதேசங்களின் அடிப்படையிலும் மன்னார் பிரதேசத்தில் எமில் நகர், பெரியகமம், உப்புக்குளம், மூர் வீதி, போன்ற இடங்கள் அதி அபாய வலயங்களாக அடையாளம் காணப்பட்டு இவற்றுக்கான கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் எதிர்வரும் 25ஆம், 26 ஆம்,27 ஆம் திகதிகளில் முன்னெடுக்கப்பட இருக்கிறன.

இதேவேளை தனியார் காணிகள் பராமரிப்பின்றி உள்ளமை அவதானிக்கப்பட்டு அது தொடர்பாக இந்தக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

மேலும் காணி உரிமையாளர்களைச் சில வேளைகளில் கண்டுபிடிப்பது கடினமாக இருப்பதாக பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவித்துள்ளார்கள்.

ஆகவே காணி உரிமையாளர்கள் இவ்வாறு வெற்றிடமாக காணப்படுகின்ற காணிகளைத் தூய்மைப்படுத்தி டெங்கு பரவலை தடுப்பதற்கு எமக்கு உதவ முன்வரவேண்டும்.

அவ்வாறு செய்யாத பட்சத்தில் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக தீர்மானித்துள்ளோம்-என்றார். (அ)

# நீர்கொழும்பில் இளம் குடும்பஸ்தர் கொடூரமாக வெட்டிப் படுகொலை!

## நேரில் பார்த்த மனைவி வைத்தியசாலையில்

கொழும்பு, மே 24

இளம் குடும்பஸ்தர் ஒருவர் நான்கு பேர் கொண்ட கும்பலால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தக் கொடூர சம்பவம் நீர்கொழும்பில் நேற்று காலை 8.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

29 வயதுடைய அன்ரனி றொபேட் என்ற இளம் குடும்பஸ்தரே இந்தச் சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

அவர் தனது மனைவியுடன் வேலைக்குச் செல்ல ஆயத்தமானபோது முகமூடி அணிந்து கூரிய ஆயுதங்களுடன் காரில் வந்தவர்கள், அவரின் வீட்டுக்குள் புகுந்து தாக்குதலை மேற்கொண்டு விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

சம்பவத்தில் வெட்டுக் காயங்களுடன் இரத்த வெள்ளத்தில் கிடந்த இளம் குடும்பஸ்தர், அயலவர்களின் உதவியுடன் உடனடியாக நீர்கொழும்பு வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட போதிலும் அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என்று வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, இந்தச் சம்பவத்தை நேரில் பார்த்து அதிர்ச்சியடைந்த உயிரிழந்தவரின் மனைவி (வயது 25) மயக்கமடைந்த நிலையில் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்த இளம் தம்பதியினருக்கு இரண்டு வயதில் ஓர் ஆண் குழந்தை உள்ளமை குறிப்பிடத்தக்கது.

சம்பவம் இடம்பெற்ற போது குறித்த குழந்தை அயல் வீடான தாத்தாவின் (உயிரிழந்தவரின் தந்தை) வீட்டில் இருந்தது என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடன் பகையே இந்தக் கொலைக்குக் காரணம் என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. (அ)

# வடமாகாண ஆளுநருடன் பிரிட்டன் தூதுவர் சந்திப்பு



யாழ்ப்பாணம், மே. 24

இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் சரா ஹூல்ரன் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

நேற்று காலை நல்லூர் கந்தசுவாமி ஆலயத்துக்குச் சென்று வழிபாடுகளில் பங்கேற்ற அவர், அதன் பின்னர் வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்துக்குகு விஜயம் செய்து ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சாள்ஸை சந்தித்துக் கலந்துரையாடல் மேற்கொண்டார். (அ)

# பயங்கரவாத சட்டத்தின் கீழ் 46 பேர் மாத்திரமே தடுப்பில்!

## இராஜாங்க அமைச்சர் அனுராத தகவல்

கொழும்பு, மே 24

**பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களில் தற்போது 46 பேர் மாத்திரமே தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என நீதி மற்றும் சிறைச்சாலை விவகார இராஜாங்க அமைச்சர் அனுராத ஜயரத்ன நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.**

சிறைச்சாலைகளில் 45 ஆண்களும் ஒரு பெண்ணும் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாள்ர்ஸ் நிர்மலநாதன் சபையில் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே இராஜாங்க அமைச்சர் இவ்வாறு கூறினார்.

யுத்தத்தின்போது கைது செய் யப்பட்ட 20 பேர் தற்போது, 14 வருடங்களுக்கும் மேலாக சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக அவர்களை விடுவிக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் சாள்ர்ஸ் நிர்மலநாதன் வலியுறுத்தினார்.

யுத்தம் நிறைவடைவதற்கு முன்னர் கைது செய்யப்பட்ட 30க்கும் மேற்பட்டவர்கள் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்தபோதிலும் அவர்க ளில் சிலரை விடுவிக்க நடவ டிக்கை எடுக்கப்பட்டதாகவும் தற்போது 22 பேரே சிறைச்சாலைகளில் இருப்பதாகவும் அமைச் சர் தெரிவித்தார்.

விசாரணைகளில் ஏற்பட்ட தாமதம் காரணமாக, அவர்களில் சிலர் நீண்ட காலமாக காவலில் வைக்கப்பட்டுள்ளதை இராஜாங்க அமைச்சர் ஒப்புக் கொண்டார்.

எஞ்சியுள்ள கைதிகளின் வழக்குகளை விரைவுபடுத்துவதற்கு ஏற்கனவே சட்டமா அதிபருடன் கலந்துரையாடல் நடத்தப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் மேலும் கூறினார். (அ)

# ஏழ்மை நாடுகள் பட்டியலில் இலங்கையும் இணைந்தது!

கொழும்பு, மே 24

பொருளாதார நெருக்கடியானது ஆசியாவின் 20 ஏழ்மையான நாடுகளில் இலங்கையையும் சேர்த்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்சைடர் மொங்கி என்ற தளத்தில் வெளியிடப்பட்ட அறிக்கையின்படி, இலங்கை, வளர்ந்து வரும் ஒரு நாடாக வகைப்படுத்தப்பட்டுள்ள நிலையில், தற்போது அதன் நாணய மதிப்பிழப்பு, அதிகரித்து வரும் பணவீக்கம் மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் கடுமையான தட்டுப்பாட்டால் மனிதாபிமான அவசரநிலை போன்ற பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்வதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

2021 ஆம் ஆண்டு நிலைவரப்படி தனிநபர் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் அடிப்படையில் ஆசியாவின் ஏழ்மையான நாடுகளில் ஒன்றாக இலங்கை இருப்பதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வரையறுக்கப்பட்ட நிதி ஆதாரங்கள், இந்த அளவீட்டின் அடிப்படையில் ஆசியாவிலுள்ள 20 ஏழ்மையான நாடுகளைத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக குறித்த தளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வறுமையானது உணவு, சுத்தமான நீர், சுகாதாரம், கல்வி, வீட்டுவசதி மற்றும் சமூக சேவைகள் போன்ற அடிப்படைத் தேவைகளுக்கான அணுகல் உட்பட பல பரிமாணங்களையும் உள்ளடக்கியது. (அ)

## நீதிமன்ற அவமதிப்பு வழக்கு;

# ஆட்சேபனைகளை முன்வைத்தார் திறைசேரி செயலாளர் சிறிவர்தன

கொழும்பு, மே 24

தமக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட இரண்டு நீதிமன்ற அவமதிப்பு வழக்குகளை சவாலுக்கு உட்படுத்தி, திறைசேரி செயலாளர் மஹிந்த சிறிவர்தன தமது சட்டத்தரணி ஊடாக ஆரம்ப ஆட்சேபனைகளை முன்வைத்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார மற்றும் தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் ஆகியோர் தாக்கல் செய்த மனுக்களை ஆட்சேபித்தே இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

முன்னதாக, உள்ளூராட்சி மன்ற தேர்தல் தொடர்பாக வெளியிடப்பட்ட உயர்நீதிமன்ற உத்தரவுக்கு இணங்கத் தவறியதற்காக திறைசேரியின் செயலாளருக்கு எதிரான இந்த நீதிமன்ற அவமதிப்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

இந்தநிலையில், உயர்நீதிமன்றம் உத்தரவிட்டதற்கு அமைய, நிதி அமைச்சரின் உத்தரவின்றி அரசியலமைப்பின் கீழ், நிதியை விடுவிக்க, திறைசேரி செயலாளருக்கு அதிகாரம் இல்லை என்று அவரின் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி தெரிவித்தார்.

அரசியலமைப்பின் சரத்துகளின் கீழ், அமைச்சர் ஒருங்கிணைக்கப்பட்ட நிதியை விடுவிக்க உத்தரவைப் பிறப்பிக்க வேண்டும் என்று சட்டத்தரணி சுட்டிக்காட்டினார்.

தேர்தல் செலவினங்களை அத்தியாவசிய செலவுகளாக சுட்டிக்காட்டாமல் அத்தியாவசிய செலவுகளுக்கு மட்டுமே நிதி ஒதுக்க அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

எனவே, இப்போது அரசியலமைப்பின் கீழ், அத்தகைய நிதியை விடுவிக்க திறைசேரியின் செயலாளருக்கு அதிகாரம் இல்லையென சட்டத்தரணி மன்றில் தெரிவித்தார். (அ)


சிவகுமார் இராஜகுலம்

# குவாட் மாநாடு:
# ஜம்மு-காஷ்மீரில் ஜி20 நிகழ்ச்சி மூலம் சீனாவுக்கு இந்தியா சொல்ல வருவது என்ன?

ஹிரோஷிமா....

1945-ம் ஆண்டு ஆகஸ்ட் 6-ம் தேதி இரண்டாம் உலகப்போரின் இறுதியில் அமெரிக்காவால் அணுகுண்டு வீச்சுக்கு இலக்கான நகரம். அந்தப் போரில் எதிரிகளாக இருந்த அமெரிக்காவும் ஜப்பானும் தற்போது உலக அரங்கில் கூட்டாளிகளாக வலம் வருகின்றன. அவற்றுடன், இந்தியா, ஆஸ்திரேலியா ஆகியவை ஓரணியில் இணைந்த குவாட் அமைப்பின் மாநாட்டால் அதே ஹிரோஷிமா நகரில் மீண்டும் உற்று நோக்கப்படுகிறது. குவாட் கூட்டத்தின் முடிவில் வெளியிடப்பட்ட அறிக்கை, சீனா மீது பெயரை மட்டும் குறிப்பிடாமல் கிட்டத்தட்ட நேரடியாகவே குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளது.

குவாட் கூட்டத்தில் பிரதமர் மோடி பங்கேற்பும், சீனாவின் ஆட்சேபனையை மீறி ஜம்மு காஷ்மீரில் ஜி20 மாநாட்டு நிகழ்ச்சிகள் நடப்பதும் ஒரே கால கட்டத்தில் நடந்தேறியிருப்பது சர்வதேச அரசியலில் உற்று நோக்கப்படுகிறது. இவற்றின் மூலம் சீனாவுக்கு இந்தியா உணர்த்த விரும்புவது என்ன?



இருபதாம் நூற்றாண்டில் ஐரோப்பாவை மட்டுமே மையம் கொண்டிருந்த சர்வதேச அரசியல் இருபத்து ஒன்றாம் நூற்றாண்டில் வெகுவாக மாறிவிட்டிருக்கிறது. இந்த நூற்றாண்டில் அரசியல், பொருளாதார, ராணுவ ரீதியாக ஆசிய கண்டம் மிகுந்த முக்கியத்துவம் பெற்றுள்ளது. குறிப்பாக, சீனா, இந்தியா ஆகிய நாடுகளின் வளர்ச்சி சர்வதேச சமூகத்தால் உற்று நோக்கப்படுகிறது. மக்கள் தொகையில் முதலிரு இடங்களை வகிக்கும் இந்நாடுகளின் அரசியல், ராணுவ, பொருளாதார முக்கியத்துவமும் தொடர்ச்சியாக அதிகரித்து வருகிறது. ஆகவேதான், இரு நாடுகளும் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியையும் உலக நாடுகள் உன்னிப்பாக கவனிக்கின்றன.

அந்த வகையில்தான், ஜம்மு காஷ்மீரில் ஜி20 மாநாட்டு நிகழ்ச்சிகள் நடத்தப்படுவதும், அதற்கு சீனாவின் எதிர்ப்பும் கவனிக்கப்படும் ஒன்றாக மாறியுள்ளது. ஜி20 மாநாடு இந்தியாவில் நடக்கும் என்ற அறிவிப்பு வெளியானது முதலே இந்தியா முழுவதும் அதுகுறித்த நிகழ்ச்சிகள் நடந்த வண்ணம் உள்ளன. அனைத்து மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களிலும் ஜி20 மாநாட்டு நிகழ்ச்சிகள் நடத்தப்படும் என்று பிரதமர் மோடி அறிவித்து, அதன்படி நிகழ்வுகளும் நடந்தேறி வருகின்றன. அந்த வரிசையில்தான் ஜம்மு காஷ்மீர் தலைநகர் சிறிநகரில் நேற்று முன்தினம் முதல் இன்றுவரை 3 நாட்கள் ஜி20 நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

இதற்கான அறிவிப்பு வெளியானதுமே, "பிரச்னைக்குரிய பகுதியில் ஜி20 மாநாட்டை நடத்துவதா" என்று சீனா எதிர்ப்பு தெரிவித்துள்ளது. சீன வெளியுறவுத்துறை செய்தித்தொடர்பாளர் பேசுகையில், "எந்த விதமான சர்ச்சைக்குரிய பகுதியிலும் ஜி20 மாநாட்டை நடத்துவதை சீனா கடுமையாக எதிர்க்கிறது. இது போன்ற மாநடுகளில் சீனா பங்கேற்காது" என கூறினார்.

இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில், "இதுபோன்ற கருத்துகளை இந்தியா தொடர்ந்து நிராகரித்து வருகிறது. அந்த பிரச்னையில் இந்தியாவின் நிலைப்பாடு என்ன என்பது சம்பந்தப்பட்ட அனைவருக்கும் தெளிவாகத் தெரியும். ஜம்மு காஷ்மீர், லடாக் ஆகிய இரு யூனியன் பிரதேசங்களும் இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதிகளாகும், அவை அப்படியே நீடிக்கும். எந்தவொரு நாட்டுக்கும் அது குறித்து கருத்து கூற உரிமை இல்லை" என்று இந்திய வெளியுறவுத்துறை தெரிவித்துள்ளது.

மறுபுறம், ஜப்பான் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பிரதமர் மோடி, ஹிரோஷிமா நகரில் நடைபெற்ற குவாட் கூட்டத்தில் பங்கேற்றார். அமெரிக்க அதிபர் ஜோ பைடன், ஜப்பான் பிரதமர் பியூமியோ கிஷிடா, ஆஸ்திரேலிய பிரதமர் அந்தோனி அல்பேனிஸ் ஆகியோருடன் அவரும் ஆலோசனை நடத்தினார்.




பல்வேறு அரசியல், பொருளாதார, ராணுவ விவகாரங்கள் குறித்தும், குறிப்பாக இந்தோ - பசிபிக் பிராந்தியத்தில் சீனாவின் ஆதிக்கம் அதிகரித்து வருவது குறித்தும் அந்த கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

பின்னர், குவாட் சார்பில் வெளியிடப்பட்ட அறிக்கை, சீனாவின் பெயரை மட்டும் குறிப்பிடாமல் அந்நாட்டின் மீது பல்வேறு குற்றச்சாட்டுகளை அடுக்கியிருந்தது. பலவீனமான சிறிய நாடுகளை கடன் வலையில் வீழ்த்தும் சீனாவின் தந்திரத்தை மறைமுகமாக சாடும் வகையில், இந்தோ-பசிபிக் பிராந்தியத்தில் கடல்வழி உள்கட்டமைப்புகளை மேம்படுத்த சிறிய நாடுகளுக்கு உதவும் அதேநேரத்தில், அவற்றால் தாக்குப்பிடிக்க முடியாத கடன் சுமையை ஏற்ற மாட்டோம் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சுழற்சி அடிப்படையில் குவாட் கூட்டமைப்பின் அடுத்த மாநாட்டை இந்தியா நடத்தவுள்ளது. 2024-ம் ஆண்டு குவாட் மாநாட்டை நடத்துவதில் இந்தியா மகிழ்ச்சி கொள்கிறது என்று பிரதமர் மோடி தெரிவித்துள்ளார். சீனா, ரஷ்யாவின் அண்மைக்கால நடவடிக்கைகளால் வேகமாக மாறி வரும் சர்வதேச அரசியல் சூழலில் இந்தியா கவனிக்கத்தக்க முக்கிய நாடுகளில் ஒன்றாகியுள்ளது. குவாட் மாநாட்டில் பிரதமர் பங்கேற்பும், ஜம்மு காஷ்மீரில் சீன ஆட்சேபனையை புறந்தள்ளி ஜி20 மாநாட்டு நிகழ்ச்சிகளை நடத்துவதும் உற்று நோக்கப்படுகிறது.

அதுகுறித்து இந்திய வெளியுறவுத்துறையில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற மூத்த அதிகாரியிடம் பேசுகையில், 'குவாட் கூட்டத்தில் பிரதமர் மோடி பங்கேற்றதும், ஜம்மு-காஷ்மீரில் ஜி20 மாநாட்டு நிகழ்ச்சி நடத்தப்பட்டதும் ஒரே கால கட்டத்தில் நடந்ததாக தெரிந்தாலும் அது தற்செயலானதே. குவாட் கூட்டத்தை இந்தியாவில் நடத்த பிரதமர் மோடி அழைப்பு விடுத்ததும் கூட நடைமுறைக்கு மாறான ஒன்றல்ல. சுழற்சி அடிப்படையில் அடுத்தபடியாக குவாட் மாநாடு இந்தியாவில் நடக்க வேண்டியதுதான். அடுத்தபடியாக, ஜி20 மாநாட்டு நிகழ்ச்சிகள் நாடு முழுவதும் அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் நடைபெறும் என்று பிரதமர் மோடி ஏற்கனவே அறிவித்திருந்தார். அதன் அடிப்படையிலேயே ஜம்மு காஷ்மீரில் நிகழ்ச்சிகள் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டன. இறையாண்மை மிக்க ஒரு நாட்டுக்கு தன்னுடைய எல்லைக்குள் எந்தவொரு நிகழ்ச்சிகளையும் நடத்தும் உரிமை உண்டு. அந்த அடிப்படையில், யாருடைய ஆட்சேபனையையும் பொருட்படுத்த வேண்டிய அவசியம் இந்தியாவுக்கு இல்லை. ஆகவே, எந்தவொரு நாட்டையும் குறிப்பாக, சீனாவை வெறுப்பூட்டும் நடவடிக்கையில் இந்தியா ஈடுபடுவதாக கருதுவதற்கு இடமே இல்லை." என்று கூறினார்.

மேலும் தொடர்ந்த அவர், "ஜம்மு-காஷ்மீர் எல்லை வழியாக பாகிஸ்தானின் குவெட்டா நகருக்கு பொருளாதார வழித்தடத்தை சீனா அமைத்து வருகிறது. கொரோனா பேரிடரால் உலகமே முடங்கிக் கிடந்த போது கூட கால்வான் பள்ளத்தாக்கில் ஊடுருவி இந்திய ராணுவ வீரர்கள் 20 பேர் உயிரிழக்கக் காரணமானது சீனாதான். அதற்குப் பிறகே, எல்லைப் பிரச்னை, பொருளாதார ஒத்துழைப்பு ஆகிய இரண்டையும் தனித்தனியாக அணுக வேண்டும் என்ற நிலைப்பாட்டை இந்தியா தளர்த்திக் கொண்டது." என்றார்.

"ஸப்ரெட்லி (Spratly Islands) தீவுகள் பிரச்னையில் பிலிப்பைன்சுக்கு சாதகமாக சர்வதேச தீர்ப்பாயம் அளித்த தீர்ப்பை நடைமுறைப்படுத்த சீனா மறுக்கிறது. இந்தியா - வங்கதேசம் இடையே இதே போன்றதொரு வழக்கில் அந்த தீர்ப்பாயம் வழங்கிய தீர்ப்பை இந்தியா அப்படியே நடைமுறைப்படுத்தியது. சர்வதேச தீர்ப்பாயத்தின் தீர்ப்பை ஏற்க மறுப்பதுடன், அண்டை நாடுகளுடன் சர்ச்சைக்குரிய எல்லையில் பிற நாட்டுக் கப்பல்கள், படகுகளை சீனா வழிமறித்தும் வருகிறது." என்று அவர் கூறினார்.

# தேசிய நல்லிணக்கத்துக்கு இருதரப்பு கருத்தொருமிப்பு

## அவசரமானது அவசியமானது சாத்தியமானது



கலாநிதி ஜெகான் பெரேரா

"இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்டவர்களினதும் தொடர்ந்தும் இடர்பாடுகளுக்கு முகங்கொடுத்துக் கொண்டிருப்பவர்களினதும் உரிமைகளுக்காக குரல்கொடுப்பதை கனடா நிறுத்தப்போவதில்லை" என்று மே 18 தமிழர் இனப்படுகொலை நினைவுதினத்தை முன்னிட்டு கனடிய பிரதமர் ஜஸ்ரின் ரூடோ கூறியதை இலங்கை அரசாங்கம் மிகவும் கடுமையாக கண்டனம் செய்திருக்கிறது.

போர் முடிவுக்கு வந்து 14 வருடங்கள் கடந்துவிட்ட நிலையில் அதுவும் சர்வதேச மட்டத்தில் மதிப்பைக்கொண்ட, தாராளவாதப் போக்குடைய ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக இருக்கும் காலகட்டத்தில் உள்நாட்டில் தேசிய நல்லிணக்க விவகாரத்தில் அரசியல் முன்னேற்றம் இல்லாத காரணத்தினால் இலங்கை சர்வதேச மட்டத்தில் ஆதரவை இழந்துவருவதும் அந்தப் போக்கை தடுத்துநிறுத்த எமது தூதரகங்களினால் இயலாமல் இருப்பதும் வேதனைக்குரியதாகும். பொருளாதார வீழ்ச்சிக்கு பிறகு முன்னெப்போதையும் விட இலங்கைக்கு சர்வதேச ஆதரவு தேவைப்படுகின்ற ஒரு நேரத்தில் இத்தகைய நிலை ஏற்பட்டிருப்பது துரதிர்ஷ்டவசமானது.

இலங்கை தொடர்ந்தும் பிளவுபட்ட சமுதாயமாக இருக்கிறது என்பதே உண்மை நிலையாகும். வடக்கு, கிழக்கில் மக்கள் போரில் உயிரிழந்த தங்கள் உறவுகளை மே 18 ஆம் திகதி கவலையுடன் நினைவுகூர்ந்த அதேவேளை மறுநாள் அரசாங்கம் போர் வெற்றியையும் நாட்டை ஐக்கியப்படுத்துவதற்காக தங்கள் உயிர்களைத் தியாகம் செய்த படைவீரர்களையும் நினைவுகூர்ந்ததை காணக்கூடியதாக இருந்தது.

இவ்வாறாக நாட்டில் காணப்படுகின்ற பிளவுபட்ட உணர்வுகளை கருத்திற்கொண்டுதான் 2010 ஆம் ஆண்டில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவினால் நியமிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு போரில் பலியான சகலரையும் ஒரே தினத்தில் நினைவுகூரவேண்டும் என்று விதப்புரை செய்திருந்தது. 'துயரமிகு மோதலில் பலியானவர்கள் மற்றும் பாதிக்கப்பட்ட சகலருக்கும் ஒருமைப்பாட்டையும் அனுதாபத்தையும் வெளிப்படுத்தவும் நாட்டில் மீண்டும் அத்தகைய இரத்தக்களரி ஒருபோதும் இடம்பெறாதிருப்பதை உறுதிப்படுத்துவதற்கான கூட்டுக் கடப்பாடு தொடர்பில் திடசங்கற்பம் பூணவும் தேசிய தினத்தில் (பெப்ரவரி 4) தனியான நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்படவேண்டும்" என்று அந்த ஆணைக்குழு கூறியது.

இதுவரையில் பெப்ரவரி 4 நினைவுகூரலுக்கானதாக அன்றி இராணுவ வல்லமையை வெளிக்காட்டும் ஒரு வண்ணச் சிறப்புமிகு நிகழ்வாகவே தொடருகிறது. இவ்வருடமும் அந்த தினம் அவ்வாறே அமைந்தது. இனத்துவ மற்றும் அரசியல் பிளவின் இரு பக்ககங்களிலும் கருத்துக்கள் கடுமையடைவது போலத் தோன்றும் இந்த நேரத்தில் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை மேலும் மேற்கோள் காட்டுவது பெறுமதியானதாக இருக்கும்.

"சிங்கள சமுதாயத்தினதும் தமிழ்ச் சமுதாயத்தினதும் அரசியல் தலைவர்களும் சிவில் சமூகமும் மோதலின் அவலத்தை முழுமையாக ஏற்றுக்கொண்டு நடந்து முடிந்தவற்றுக்காக கூட்டாக வருந்தவேண்டியது நல்லிணக்கச் செயன்முறைக்கு அவசியமாகும். இரு பிரதான அரசியல் கட்சிகளினதும் தென்னிலங்கை அரசியல் தலைவர்கள் தேசிய நலன்களை மனதிற்கொண்டு செயற்பட்டு தமிழ் மக்களுக்கு ஏற்புடைய தீர்வொன்றை வழங்குவதற்கு கருத்தொருமிப்பைக் கண்டிருந்தால் மோதலை தவிர்த்திருக்கமுடியும்."

### அறகலய ஐக்கியம்

உண்மையில் தற்போதைய தருணம் இனநெருக்கடிக்கு தீர்வைக் காண்பதற்கு இருதரப்பு அணுகுமுறையொன்றைக் கடைப்பிடிப்பதற்கு பொருத்தமானதாகும். சிவில் சமூக உறுப்பினர்கள் குழுவொன்றுடன் பேசிய எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச அறகலயவுக்கு பின்னரான சூழ்நிலையில் நாட்டின் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண்பது சுலபமாகிவிட்டது என்று கூறியிருந்தார். இன மற்றும் சமூக பிளவுகளை கடந்து நின்றமை போராட்ட இயக்கத்தின் மிகவும் குறிப்பிடத்தக்க அம்சங்களில் ஒன்றாகும். இலங்கையின் பன்முக - பல்லின பலமத சமூக அமைப்புக்கு பொருத்தமான முறையில் வேற்றுமையில் ஐக்கியத்தைக் கொண்டாடிய ஒரு போக்கை போராட்ட இயக்கத்தில் காணக்கூடியதாக இருந்தது.

சகல குடிமக்களுக்கும் சமத்துவத்தை வேண்டிநின்ற இளம் ஆர்ப்பாட்டக்காரர்கள் குறுகிய நோக்குடைய தேசியவாத பிரசாரங்களை முன்னெடுத்து மக்கள் மத்தியில் சந்தேகத்தையும் அச்சத்தையும் தோற்றுவித்து அணிதிரட்டல்களைச் செய்து அதிகாரத்துக்கு வந்த அரசியல்வாதிகளை கடுமையாக கண்டனம் செய்யும் சுலோகங்களை எழுப்பியதை அறகலய காலத்தில் நாடும் உலகமும் கேட்டன.

சமூகங்களுக்கு இடையில் நிலவிய சந்தேகமும் பாதுகாப்பில்லாத உணர்வுமே இனப்பிரச்சினைக்கான மூலவேராகவும் பிரச்சினையை தீர்ப்பதற்கு குந்தகமாகவும் இருந்து வந்தன என்று கூறிய எதிர்க்கட்சி தலைவர் பிரேமதாச அறகலயவை மூளவைத்த பொருளாதார நெருக்கடி மக்களை ஐக்கியப்படுத்தியதன் மூலம் அந்த பாதகமான சூழ்நிலையை பெருமளவுக்கு மாற்றிவிட்டது என்றார்.

பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து அத்தியாவசியப் பொருட்களுக்கு தட்டுப்பாடும் அவற்றைப் பெறுவதற்கு நீண்ட வரிசைகளில் காத்துநிற்கவேண்டிய நிலைமை ஏற்பட்டபோது தாங்கள் முகங்கொடுத்த பொதுவான பிரச்சினைக்காக மக்கள் ஒன்றுபட்டு போராட்டத்தில் இறங்கினார்கள். ஆனால் பதவியில் இருந்த அரசியல் தலைவர்களை அகற்ற முடிந்த அதேவேளை அவர்களைப் பதிலீடு செய்யக்கூடியதாக போராட்ட இயக்கத்தினால் அதற்கென்று ஒரு தலைமைத்துவத்தை உருவாக்க முடியாமல்போய்விட்டது. போராட்ட இயக்கம் ஒடுக்கப்பட்டது. அதேபோன்றே மக்கள் மத்தியில் காணப்பட்ட ஐக்கியத்தினால் இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வைக்காணக்கூடிய வாய்ப்பும் தவறிப்போனது. மக்கள் மத்தியில் பாதுகாப்பு உணர்வை தோற்றுவிக்கக்கூடிய அரசியல் தலைமைத்துவத்திடமிருந்தே இதற்கு பதில் வரவேண்டும்.

கடந்த காலத்தில் பல தடவைகள் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வெற்றிபெறத் தவறிய நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரச்சினைக்கு தீர்வைக்காண்பதற்கு தமிழ் அரசியல் கட்சிகளுடன் தற்போது பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்திருக்கிறார். கடந்த பெப்ரவரி 4 இலங்கையின் சுதந்திரதினத்துக்கு முன்னதாக இனப்பிரச்சினைக்கு தீர்வைக் காணப்போவதாகக் கூட அவர் அறிவித்ததையும் சில மாதங்களுக்கு முன்னர் கண்டோம். அடுத்த தலைமுறைக்கு இந்தப் பிரச்சினையை விட்டுச்செல்ல விரும்பவில்லை என்று கூறியதன் மூலம் தனது அபிலாசையை வெளிக்காட்டுவதில் அவர் ஒரு முதிர்ந்த அரசியல் தலைவரை போன்று நடந்துகொண்டார்.

நல்லிணக்கச் செயன்முறை தொடர்பில் அவர்களில் கருத்துக்களை அறிந்துகொள்வதற்காக சிவில் சமூக உறுப்பினர்களை எதிர்க்கட்சி தலைவர் அழைத்துப் பேசியமையும் இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கான முயற்சிகளை அறகலய சுலபமாக்கியிருக்கிறது என்ற அவரின் கருத்தும் அந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் ஆக்கபூர்வமான முறையில் ஈடுபாட்டைக் காட்டுவதற்கு அவருக்கு இருக்கும் விருப்பத்தின் அறிகுறிகளாகும். பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கும் அரசியல் தீர்வொன்றை நடைமுறைப்படுத்துவதற்கும் அவசியமான இருதரப்பு கருத்தொருமிப்பு சூழலை தோற்றுவிப்பதற்கு இதனால் முடியும்.

### இருதரப்பு கருத்தொருமிப்பு

மாகாண சபைகள் முறைக்கு புத்துயிரூட்டி அதிகாரமளிக்கவேண்டிய அவசியம் இனப்பிரச்சினைக்கு நீண்டகால அடிப்படையிலான தீர்வொன்றைக் காண்பதற்கு முக்கியமானதாகும். வேறுபட்ட இன, மத சமூகங்கள் அவை பெரும்பான்னையினராக வாழ்கின்ற பகுதிகளில் தங்கள் அலுவல்களை கையாளுவதற்கு வகைசெய்யக்கூடிய பிராந்திய சுயாட்சி என்ற விவகாரம் நீண்டகால வரலாற்றைக் கொணடதாகும். 1957 பண்டாரநாயக்க -- செல்வநாயகம் ஒப்பந்தமே அரசாங்க தலைமைத்துவத்துக்கும் தமிழ் அரசியல் சமூகத்துக்கும் இடையில் பேச்சு மூலமான இணக்கப்பாடு ஒன்று காணப்பட்ட முதலாவது சந்தர்ப்பமாகும்.

அதையடுத்து 1965 டட்லி சேனநாயக்க - செல்வநாயகம் ஒப்பந்தம், 1987 இந்திய -- இலங்கை சமாதான உடன்படிக்கை , 2000 சந்திரிகா குமாரதுங்க அரசியலமைப்பு வரைவு, மகிந்த ராஜபக்ச ஆட்சிக்காலத்தில் 2010 சர்வகட்சி பிரதிநிதித்துவக் குழுவின் யோசனைகள் மற்றும் சிறிசேன -- விக்கிரமசிங்க அரசாங்க காலத்தில் 2015 அரசியலமைப்பு சபை என்று பல்வேறு யோசனைகள் வந்தன.

இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வுக்கு பல தடவைகள் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு யோசனைகளும் வகுக்கப்பட்டன. அவை பதவியில் இருந்த அரசாங்கங்களினால் அல்லது அந்த அரசாங்கங்களுக்குள் இருந்த பிரிவினரால் ஏற்றுக்கொள்ளப்பட்டன. ஆனால் எதிர்க்கட்சியினால் அவை நிராகரிக்கப்பட்டன. இத்தடவை இது வித்தியாசமானதாக இருக்கமுடியும்.

சிவில் சமூக உறுப்பினர்களுடனான சந்திப்பின்போது எதிர்க்கட்சி தலைவர் பிரேமதாசவிடம் அதிகாரப்பரவலாக்கம் தொடர்பில் அவரது நிலைப்பாடு என்ன என்று கேட்கப்பட்டது. அதற்கு பதிலளித்த அவர் ஒற்றையாட்சி அரசுக்குள் உச்சபட்ச அதிகாரப்பரவலாக்கமே தனது நிலைப்பாடு என்று இதை 2019 ஜனாதிபதி தேர்தலின்போதும் தான் கூறியதாகவும் குறிப்பிட்டார். இத்தகைய நிலைப்பாடு 13 வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதன் மூலமாக அரசியலைமைப்பு ஏற்பாடுகள் பின்பற்றப்படவேண்டும் என்ற ஜனாதிபதி விக்கிரமசிங்கவின் நிலைப்பாட்டை ஒத்திருக்கிறது.

இனத்துவ தேசியவாத அரசியலை நிராகரிப்பது என்பது ஜனாதிபதி விக்கிரமசிங்க அவரது வாழ்நாள் பூராவும் கடைப்பிடித்துவரும் மிகவும் ஆரோக்கியமான பண்புகளில் ஒன்றாகும். தேர்தல்களில் வாக்குகளைப் பெறவேண்டும் என்பதற்காக இனவாத பீதிகளையோ அல்லது தப்பெண்ணங்களையோ அவர் கிளறியதில்லை. அதே காரணத்துக்காக அவர் பழிபாவத்துக்கு அஞ்சாத அரசியல் எதிரிகளிடம் அவர் தேர்தல்களில் தோல்விகண்டார். அதேபோன்றே எதிர்க்கட்சி தலைவர் பிரேமதாசவும் இனத்துவ தேசியவாத அரசியலில் ஒரு போதும் ஈடுபடவில்லை.

அதனால் அரசியல் தீர்வொன்றைக் காண்பதையும் அரசாங்கம் அமைக்க உத்தேசித்திருக்கும் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் ஊடாக கடந்த கால மனித உரிமைகள் பிரச்சினைளைக் கையாள்வதையும் உறுதிசெய்யக்கூடியதாக இனவெறி இல்லாத இவ்விரு தலைவர்களும் சேர்ந்து செயற்படுவது முக்கியமானதாகும். தானும் கூட போர்காலக் கொடுமைகளினால் பாதிக்கப்பட்ட அனுபவத்தைக் கொண்டவர் என்ற முறையில் எதிர்க்கட்சி தலைவர் கடந்தகால காயங்களைக் குணப்படுத்தி சர்வதேச சமூகத்தில் இலங்கை அதற்குரிய இடத்தை மீண்டும் பெறுவதற்கான பாதையைக் காட்டக்கூடிய பெருந்தன்மையையும் வெறுப்புணர்வு இல்லாத பண்பையும் வெளிக்காட்டியிருக்கிறார்.

# மாலியில் வெடிப்புச் சம்பவம் 4 இலங்கை படையினர் காயம்

கொழும்பு, மே 24

மேற்கு ஆபிரிக்காவின் மாலியில் வெடிகுண்டு சாதனம் ஒன்று வெடித்ததில், ஐக்கிய நாடுகள் அமைதி காக்கும் படையில் அங்கம் வகிக்கும் இலங்கை படையினர் நால்வர் காயமடைந்ததாக ஐக்கிய நாடுகளின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

அவர்களுக்கு பாரிய காயங்கள் ஏற்படாத நிலையில், மருத்துவ சிகிச்சைப் பெற்று வருவதாக பேச்சாளர் ஸ்டீபன் டுஜாரிக் கூறினார்.

இந்த சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை குறித்த படையினரின் முகாமுக்கு வடமேற்கே இடம்பெற்றுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

கவச வாகனம் ஒன்றில், ஆயுத வாகனத் தொடரணிக்கு பாதுகாப்பு அளித்தபோதே இந்த சம்பவம் நிகழ்ந்துள்ளது.

2022 ஆம் ஆண்டில் குண்டுத் தாக்குதலின்போது 14 படையினர் கொல்லப்பட்ட இடத்திலேயே கடந்த திங்கட்கிழமை சம்பவமும் இடம்பெற்றுள்ளது. (அ)

# சீன அரசு நன்கொடையாக அளித்த மண்ணெண்ணெய் மீனவர்களுக்கு!

கொழும்பு, மே 24

சீன அரசாங்கத்தினால் நன்கொடையாக வழங்கப்பட்ட மண்ணெண்ணெயை மீனவர்களுக்கு பகிர்ந்தளிக்கும் நடவடிக்கை நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

நேற்று காலை பாணந்துறை மீனவர் துறைமுகத்தில் இந்த நடவடிக்கை ஆரம்பமானது.

நாடளாவிய ரீதியில் மண்ணெண்ணெய் பயன்படுத்தும் 26000 மீன்பிடிப் படகுகளுக்கு தலா 150 லீற்றர் மண்ணெண்ணெய் இலவசமாகப் பகிர்ந்தளிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)



# தொலைந்த ரூ.4 இலட்சம் உரியவரிடம் கையளிப்பு

மட்டக்களப்பு, மே 24

மட்டக்களப்பு காத்தான்குடி ஆறாம் குறிச்சி இரும்புத் தைக்கா பள்ளிவாசல் வீதியில் வைத்து றிஸ்வி என்பவருடைய 4 இலட்சம் ரூபா பணம் காணாமல்போன நிலையில், காத்தான்குடி முதலாம் குறிச்சி ஹஸைனிய்யா வீதியைச் சேர்ந்த முயீனுல் ஹக் மற்றும் கொக்கட்டிச்சோலையைச் சேர்ந்த தெய்வநாயகம் தெய்வேந்தீரன் ஆகிய இருவரும் ஒரே நேரத்தில் பணம் வீதியில் கிடப்பதைக் கண்டு காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் அதனை ஒப்படைத்தனர்.

பணத்தைத் தொலைத்தவர் அடையாளப்படுத்தப்பட்டு, காத்தான்குடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி துமிந்த நயனசிறி,காத்தான்குடி பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி ரஹீம், பொலிஸ் பரிசோதகர் சியாம் ஆகியோர் முன்னிலையில் பணம் உரியவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

பணத்தைக் கண்டெடுத்து ஒப்படைத்த இருவருக்கும் பொலிஸ் அதிகாரிகள் பாராட்டுக்களை தெரிவித்ததுடன் பணத்தை தொலைத்த றிஸ்வியும் தமது நன்றியை தெரிவித்தார். (அ)



அழ.பகீரதனின் “ஐப்பசியில்” கவிதைத் தொகுதி வெளியீட்டு விழா கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. இதில், கலாநிதி ந. ரவீந்திரன் நூலை வெளியிட்டுவைக்க முதல் பிரதியை ஐ. கெங்காதரன் பெற்றுக் கொண்டார்.

# மகா கும்பாபிஷேகம்

முல்லைத்தீவு, மே 24

ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரம் என்று புகழப்படும் பூலோகநாயகி உடனமர் வேகாவனேஸ்வரர் ஆலயத்தின் மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் ஜூன் முதலாம் திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

கர்மாரம்ப கிரியைகள் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை தொடங்குகிறது. தொடர்ந்து, 29, 30, 31 ஆம் திகதிகளில் எண்ணெய் காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெற்று முதலாம் திகதி மகா கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது. (ஐ)

# தரமற்ற அழகு சாதனப்பொருள் விற்பனை செய்த பெண் கைது

கொழும்பு, மே 24

தரமற்ற அழகு சாதனப் பொருட்களை விற்பனை செய்த பெண் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

அவர் முகவரி குறிப்பிடப்படாத நிலையில் அழகுசாதனப் பொருட்களை இணையத்தின் வாயிலாக விற்பனை செய்து வந்துள்ளார்.

இந்த நிலையில் பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து கொஸ்வத்தையில் வைத்து குறித்த பெண்ணை பொலிஸார் கைது செய்தனர்.

அத்துடன் குறித்த பெண் வசித்த வீட்டிலிருந்து ஆயிரம் சிறிய போத்தல்கள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், அவற்றுக்கு சீல் வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (அ)






# அட்டாளைச்சேனை கூட்டுறவுச் சங்க பணிப்பாளர் சபை கலைக்கப்பட்டது

மட்டக்களப்பு, மே 24

அட்டாளைச்சேனை பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் பணிப்பாளர் சபை கலைக்கப் பட்டுள்ளது.

அட்டாளைச்சேனை பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு புதிய பணிப்பாளர் சபை உறுப் பினர்களைத் தெரிவு செய்யும் பொருட்டு கடந்த 2023.01.04 அன்று இடம்பெற்ற விசேட பொதுச்சபைக் கூட்டம் கூட்டு றவுத் துணைவிதிகளுக்கு புறம் பாக இடம்பெற்றதாக 33 பொதுச்சபை உறுப்பினர்கள் மேற்கொண்ட முறைப் பாட்டுக்கு அமைய மேற்கொள் ளப்பட்ட விசாரணை அறிக்கை களை மையப்படுத்தியும், கூட்டு றவுச் சங்கங்களின் ஆணையாள ரும், பதிவாளருமாகிய பொறி யிலாளர் என்.சிவலிங்கம் தனக் குள்ள் அதிகாரங்களுக்கு அமை வாகவும் பணிப்பாளர் சபை கலைக்கப்பட்டுள்ளதாக அறி விக்கப்பட்டுள்ளது.

இந்தக் கடிதம் கடந்த 17ஆம் திகதியிடப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

குறித்த பணிப்பாளர் சபை தெரிவின் ஊடாக நியமிப்புச் செய்யப்பட்டுள்ள தலைவர் 46(1) விசாரணைகளுடன் தொடர்புடையவர். குறித்த தலைவரைப் பதவியில் வைத் துக்கொண்டு பலநோக்கு கூட்டு றவுச் சங்கத்தை அபிவிருத்தி செய்யமுடியாது என்றும், சில சமயங்களில் ஆவணங்கள், சாட் சியங்கள் இல்லாமலாக்கப்படு வதற்கான சந்தர்ப்பங்கள் அதிக மாக காணப்படுவதாகவும் பொதுச்சபை உறுப்பினர்கள் எழுத்துமூலம் ஆணையாளருக்கு தெரியப்படுத்தியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# வோட்டர் ஜெல்லுடன் பெண் கைது

திருமலை, மே 24

குச்சவெளி பொலிஸாருடன் இணைந்து இலங்கை கடற்படை யினர் திருகோணமலை குச்ச வெளி காசிம்நகர் பகுதியில் நடத்திய விசேட தேடுதல் நட வடிக்கையின்போது, வோட்டர் ஜெல் எனப்படும் வெடிபொருட் களை வைத்திருந்த குற்றச்சாட் டின் கீழ் பெண்ணொருவர் கைது செய்யப்பட்டார்.

சந்தேகத்துக்கு இடமான வீடு சுற்றிவளைக்கப்பட்டது. அங்கிருந்து 54 வோட்டர் ஜெல் மற்றும் மின்சாரம் அல்லாது பயன்படுத்தக்கூடிய 40 டெட்டனேட்டர்கள் கைப்பற் றப்பட்டன. (அ)

# நிந்தவூரில் பழக்கடைகளில் திடீர் சோதனை நடவடிக்கை





நிந்தவூர், மே 24

நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி கே.எல்.எம். றயீஸ் வழிகாட்டலில் பழக்கடைக ளின் தரத்தைப் பேணும் வகை யில் நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தினால் அனைத்து பழக்கடைகளிலும் பரிசோதனை நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டது.

இதில் மக்களின் நுகர்வுக்கு பொருத்தமற்ற பழங்கள் மற்றும் செயற்கையாக பழங்களைப் பழுக்க வைப்பதற்காக பயன்ப டுத்தும் இரசாயனங்கள் கைப் பற்றப்பட்டு அழிக்கப்பட்டன.

இவ்வாறு பழங்களைச் செயற் கையாக பழுக்க வைக்க பயன்ப டுத்தப்படும் இரசாயனம் கலந் துதெளிக்கப்பட்ட பழங்களை சிறியவர்கள் முதல் பெரியவர் கள் வரை உட்கொண்டு பல நோய்களுக்குள்ளாகின்றனர்.

எனவே, இதனை தடுக்கும் பொருட்டு இவ்வாறு இரசாய னம் கலந்து தெளிப்பதையும் இரசாயனம் தெளிப்பதற்கு பயன் படுத்தும் உபகரணங்களையும் மற்றும் அழுகிய நிலையில் பழங் களையும் கண்டால் மக்கள் விழிப்புடன் இருந்து 0672250834 என்ற தொலைபேசி இலக்கத் திற்கு தெரியப்படுத்துங்கள் என சுகாதார வைத்திய அதிகாரி றயீஸ் தெரிவித்தார்.

இப்பரிசோதனை நடவடிக் கையில் நிந்தவூர் சுகாதார வைத் திய அதிகாரி கே.எல்.எம். றயீஸ், மேற்பார்வை பொதுச் சுகாதா ரப் பரிசோதகர், பொதுச் சுகா தாரப் பரிசோதகர்கள், மற்றும் அலுவலக ஊழியர்களும் கலந் துகொண்டனர். (அ)

# மருத்துவ மாதுக்களுக்கு நியமனம்



திருமலை, மே 24

மத்திய சுகாதர அமைச்சினால் கிழக்கு மாகாணத்துக்கு நியம னம் செய்யப்பட்ட 5 பொதுச் சுகாதார மருத்துவ மாதுக்களுக் கான நியமனக் கடிதங்களை வழங்கும் நிகழ்வு நேற்று முன் தினம் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சில் இடம்பெற்றது.

இவர்களுக்கான நியமனக் கடிதங்களை கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலா ளர் திருமதி ஜே.ஜே.முரளிதன் வழங்கினார். (அ)

# திருக்கோணேஸ்வரம் ஆலயத்துக்கு பாப்பரசரின் பிரதிநிதி திடீர் விஜயம்!

## அங்கு நிலைமைகளை நேரில் பார்வையிட்டார்





திருமலை, மே 24

**பாப்பரசரின் இலங்கைக்கான பிரதிநிதி மேதகு பிறாயன் உதைக்வே ஆண்டகை இலங் கைக்கு மேற்கொண்டுள்ளார்.**

இவர் நேற்று முன் தினம் திரு கோணமலை திருக்கோணேஸ் வரம் ஆலயத்துக்குச் சென்று பார்வையிட்டார்.

இதன்போது அவர் திருக்கோ ணேஸ்வரம் ஆலயத்தின் தொன் மையையும், வரலாற்றையும் கேட்டறிந்துக்கொண்டார்.

வரலாற்றுச் சிறப்புமிக்க திருக்கோணேஸ்வரம் ஆலயம்

இலங்கையில் பல வரலாற் றுச் சிறப்புமிக்க திருக்கோணேஸ் வரம் ஆலயத்துக்குச் சொந்த மான காணியை உல்லாசத்துறை அபிவிருத்தியின் பெயரில் ஆக்கி ரமிக்க நடவடிக்கை எடுக்கப் பட்டு வந்தமை அண்மையில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி யது.

இந்நிலையில், பாப்பரசரின் இலங்கைக்கான பிரதிநிதி மேதகு பிறாயன் உதைக்வே ஆண்டகை யினதும் திருகோணமலை ஆயர் நோயல் இம்மானுவேல் ஆண் டகையினதும் இவ்விஜயம் மிக வும் முககியத்துவம் வாய்ந்ததா கப் பார்க்கப்படுகின்றது. (அ)

# நாவிதன்வெளி அன்னமலை ம.விக்கு ஒலிபெருக்கி உபகரணம் அன்பளிப்பு

காரைதீவு, மே 24

சம்மாந்துறை வலயத்துக்கு உட்பட்ட நாவிதன்வெளி அன் னமலை மகா வித்தியாலயத்திற் கென ஒலிபெருக்கி உபகரணங் களை பாடசாலை அபிமானி யொருவர் வழங்கினார்.

இவ் உபகரணங்களை நாவி தன்வெளியை வசிப்பிடமாகக் கொண்ட தனவந்தரும் கொடை யாளரும் பாடசாலையின் பழைய மாணவருமான இந்திரன் ரூபசாந்தன் வழங்கியுள்ளார்.

பாடசாலை அதிபர் திருமதி நிலந்தினி ரவிச்சந்திரனிடம் பாடசாலைக்கான 2 இலட் சத்து 50 ரூபா பெருமதியான ஒலிபெருக்கி உபகரணங்களைக் கொள்வனவு செய்து வழங்கும் நிகழ்வு சிரேஷ்ட ஆசிரியர் ந.கோடீஸ்வரனின் ஒருங்கி ணைப்பில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் நாவிதன் வெளியை வசிப்பிடமாக கொண்ட தனவந்தரும் கொடை யாளரும் பாடசாலையின் பழைய மாணவருமான இந்தி ரன் ரூபசாந்தனை பாடசாலைச் சமுகம் வாழ்த்தி கௌரவித்தது. (அ)



# சிரிய ஜனாதிபதிக்கு எதிராக வழக்கு விசாரணை வேண்டும்

## பிரான்ஸ் அமைச்சர் வலியுறுத்து

பாரிஸ், மே 24

**சிரியாவின் சிவில் யுத்தத்தின்போது இலட்சக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டமை மற்றும் இரசாயன ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டமை தொடர்பில் சிரிய ஜனாதிபதி பஷர் அல் அஸாத்துக்கு எதிராக வழக்கு விசாரணை நடத்தப்படவேண்டும் என பிரான்ஸின் வெளிவிவகார அமைச்சர் கத்தரின் கொலோனா கூறியுள்ளார்.**



அமைச்சர் கொலோனா கூறியுள்ளார்.

தொலைக்காட்சி நேர்காணல் ஒன்றின்போது, ஜனாதிபதி அஸாத்துக்கு எதிராக வழக்கு விசாரணை நடத்தப்படவேண்டுமா என அமைச்சர் கத்தரின் கொலோனாவிடம் கேட்கப்பட்டது.

அப்போது அமைச்சர் கத்தரின் கொலோனா பதிலளிக்கையில், ஆம், குற்றங்கள் மற்றும் தண்டனை விலக்களிப்புக்கு எதிரான போராட்டமானது பிரெஞ்சு இராஜதந்திரத்தின் ஒரு பகுதியாகும் எனக் கூறியுள்ளார்.

கடந்தவாரம் சவூதி அரேபியாவில் நடைபெற்ற அரபு லீக் உச்சிமாநாட்டில் சிரிய ஜனாதிபதி அல் அஸாத் பங்குபற்றினார்.

10 வருடங்களுக்கு மேலாக இவ்வமைப்பிலிருந்து அல் அஸாத் விலக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

எனினும், அவருக்கு எதிரான கொள்கையிலிருந்து பிரான்ஸின் நிலைப்பாடு மாறவில்லை என (அ)

# கயானா பாடசாலை விடுதியில் தீ விபத்து!

## 19 மாணவர்கள் உயிரிழப்பு



ஜோர்ஜ்ரவுண், மே 24

தென் அமெரிக்க நாடான கயானாவின் தென்மேற்கு பகுதியில் உள்ள மஹ்தியா நகரில் 30 இற்கும் மேற்பட்டோர் தங்கியுள்ள அரச பாடசாலை விடுதி ஒன்றில் திடீரென தீ விபத்து ஏற்பட்டது

இந்த தீ விபத்தில் 19 குழந்தைகள் உயிரிழந்ததோடு. மேலும் பலர் காயமடைந்தனர். பலியானவர்களில் பெரும்பாலானோர் சிறுமிகள் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

தீ விபத்து தொடர்பாக அதிபர் இர்பான் அலி- இது ஒரு பயங்கரமான சம்பவம். இது துயரமானது. வேதனையானது என தெரிவித்தார்.

தீ விபத்துக்கான காரணம் குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

பாடசாலை விடுதியில் ஏற்பட்ட தீவிபத்தில் சிக்கி 19 குழந்தைகள் பலியானமை அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. (அ)

# 36 ஆண்டுகளுக்கு முன் மாணவர்களிடம் தவறாக நடந்துகொண்டார் ஆசிரியை!

## கனடாவில் தற்போது கைதானார்



மொன்றியல், மே 24

கனடாவை சேர்ந்த முன்னாள் பள்ளி ஆசிரியை பாலியல் வழக்கில் மீண்டும் கைது செய்யப்பட்டுள்ளார்.

86 வயதான பர்பரா பேக்ஸ்டர் என்ற பெண் 1983 இல் இருந்து 1987 வரையிலான காலகட்டத்தில் அவர் பணியாற்றிய பள்ளிக்கூடத்திலும் தனது வீட்டிலும் வைத்து மூன்று மாணவர்களிடம் தவறாக நடந்து கொண்டுள்ளார்.

இது தொடர்பான முறைப்பாட்டில் முன்னரே கைதான பர்பரா சிறையில் இருந்து விடுவிக்கப்பட்டார்.

இந்த நிலையில் அண்மையில் இந்த வழக்கில் பர்பரா மீண்டும் கைது செய்யப்பட்டார். அவர் மீது புதிதாக மூன்று வழக்குகள் போடப்பட்டுள்ளன.

புதிதாக அடையாளம் காணப்பட்ட பாதிக்கப்பட்டவர்கள் பற்றிய தகவலை பொலிஸ் வெளியிடவில்லை. சம்பவங்கள் பற்றிய கூடுதல் விவரங்களை வழங்கவில்லை.

பர்பராவால் மேலும் பாதிக்கப்பட்டவர்கள் இருக்கலாம் என சந்தேகிக்கப்படும் நிலையில், பொலிஸார் இது தொடர்பில் உரிய தகவல் தெரிந்தவர்கள் தங்களை தொடர்பு கொள்ளுமாறு வலியுறுத்தியுள்ளனர். (அ)

# நான் மீண்டும் கைதானால் அமைதியைப் பேணுங்கள்!

## இம்ரான் கான் வேண்டுகோள்

இஸ்லாமாபாத், மே 24

தான் மீண்டும் கைது செய்யப்பட்டாலும் தனது ஆதரவாளர்கள் அமைதியை கடைபிடிக்க வேண்டும் என பாகிஸ்தானின் முன்னாள் பிரதர் இம்ரான் கான் கோரியுள்ளார்.

அல் காதிர் அறக்கட்டளை வழக்கில் கடந்த 9 ஆம் திகதி கைது செய்யப்பட்ட இம்ரான் கான் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இதேவேளை, இஸ்லாமாபாத்திலுள்ள பொறுப்புடைமை நீதிமன்றத்தில் நேற்று இம்ரான் கான் ஆஜரானார்.

இந்நிலையில், அனைத்து வழக்குகளில் தான் முன்பிணை பெற்றுள்ளபோதிலும் தான் மீண்டும் கைது செய்யப்படுவதற்கான வாய்ப்பு அதிகமாக உள்ளது என இம்ரான் கான் கூறினார்.

அதேவேளை, தான் கைது செய்யப்பட்டாலும் அமைதியை கடைபிடிக்குமாறு இம்ரான் கான் வலியுறுத்தியுள்ளார்.

எனினும் அமைதியான ஆர்ப்பாட்டங்களை நடத்துவது அடிப்படை உரிமை எனவும் அவர் கூறினார். (அ)

# மேட்டா நிறுவனத்துக்கு 1.2 பில்லியன் யூரோ அபராதம்




நியூயோர்க், மே 24

மெட்டா நிறுவனத்திற்கு 1.2 பில்லியன் யூரோ அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பிய யூனியனில் உள்ள அதன் முன்னணி தனியுரிமை கட்டுப்பாட்டாளரால் மேற்படி அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

பயனர் தவல்களை தவறாக கையாண்டமைக்காக மேற்படி அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுவதுடன், பயனர்களின் தரவுகளை அமெரிக்காவிற்கு மாற்றுவதை நிறுத்த ஐந்து மாதங்கள் அவகாசமும் வழங்கப்பட்டுள்ளது. (அ)

# கேன்ஸ் திரைப்பட விழாவில் பரபரப்பை ஏற்படுத்திய பெண்



பாரிஸ், மே 24

பிரான்ஸில் நடைபெற்று வரும் 76ஆவது கேன்ஸ் திரைப்பட விழாவில் உக்ரைனுக்கு ஆதரவாக ஒரு பெண் செய்த செயல் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

உக்ரைனுக்கு ஆதரவளிக்கும் விதமாக அந்த பெண் உக்ரைன் தேசியக்கொடி நிறத்தில் உடையணிந்து வந்ததுடன், திடீரென ஆடைக்குள் மறைத்து வைத்திருந்த இரத்த நிறத்திலான திரவத்தை தலையில் ஊற்ற ஆரம்பித்தார்.இதனால் அங்கு பரபரப்பு நிலவியது.

இதனையடுத்து பாதுகாவலர்கள் அந்த பெண்ணை வலுக்கட்டாயமாக வெளியேற்றினர்.

கேன்ஸ் திரைப்பட விழாவின் இயக்குநர் தியரி ப்ரீமாக்ஸ், கடந்த வாரம் பேசும்போது உக்ரைனுக்கு ஆதரவு தெரிவித்ததாக ரெலிகிராப் செய்தி வெளியிட்டுள்ளது.

திரைப்பட விழாவின் தொடக்க நிகழ்வில், பிரெஞ்சு நடிகை கத்தரின் டெனியூவ், உக்ரைன் கவிஞர் லெஸ்யா உக்ரைனுக்கா எழுதிய ஹோப் என்ற கவிதையை வாசித்து, போரில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தினார்.

ரஷ்ய அரசாங்கத்துடன் தொடர்புடைய குழுவினர் அல்லது திரைப்பட நிறுவனங்களின் மீது கடந்த ஆண்டு தடை விதிக்கப்பட்டது.

இந்த ஆண்டு திரைப்பட விழாவிலும் அந்த தடை அமலில் உள்ளது என்று ரெலிகிராப் தெரிவித்துள்ளது. (அ)

# சிமோனா மீது மீண்டும் ஊக்கமருந்து குற்றச்சாட்டு!



லண்டன், மே 24

ஊக்கமருந்து விதிகளை மீறினார் என்று முன்னாள் முதல் நிலை வீராங்கனை சிமோனா ஹாலெப் மீது மீண்டும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

ருமேனிய ரென்னிஸ் வீராங்கனை சிமோனா ஹாலெப். பிரெஞ்ச் ஓப்பன் (2018), விம்பிள்டன் (2019) என இரு கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றார். 2022, அமெரிக்க ஓப்பன் தொடரில் இவரிடம் ஊக்க மருந்து சோதனை நடந்தது. இதில் தடை செய்யப்பட்ட மருந்தை பயன்படுத்தியமை தெரிய வந்தது இதைய டுத்து அவருக்கு இடைக்கால தடை விதிக்கப்பட்டது.

இதனிடையே, சிமோனா தனது உயிரியல் சோதனை தொடர்பான அறிக்கையை மாற்றியுள்ளார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இதுகுறித்து ஹாலெப் கூறுகையில்,

“சர்வதேச ரென்னிஸ் ஒருங்கிணைப்பு மையம் என் மீதான குற்றங்களை தவறு என நிரூபிக்க வாய்ப்புத் தர வேண்டும். இது தொடர்பான விசாரணை இரு முறை தாமதமானது. ஆனால், தொடர்ந்து முறைப்பாடுகளை எதிர்கொண்டு வருகிறேன். இதை என்னால் புரிந்து கொள்ளவே முடியவில்லை. தேவையற்ற மருந்துகளை பயன்படுத்துவது குறித்து ஒருபோதும் நினைக்காத நான், குற்றமற்றவர் என்பதை நிரூபிக்க போராடு கிறேன்”, என்றார். (ஐ)

# தோல்வியை தாங்காத ரசிகர்கள் கில்லின் சகோதரியை விமர்சிப்பு

பெங்களூர், மே 24

ஐ. பி. எல். தொடரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்த கிரிக்கெட் போட்டியில் பெங்களூர் தோல்வி யடைந்தது. இந்தப் போட்டியில் பெங்களூரின் தோல்விக்கு குஜராத் அணியின் ஷூப்மன் கில் அடித்த சதமே முக்கிய காரணம் என்று பெங்களூர் ரசிகர்கள் அவரை வசைபாடி வருகின்றனர்.

இதேநேரம், கில்லின் சகோதரியான ஷாநீல் கில் குறித்தும் சிலர் தவறான விதத்தில் கருத்துகளை வெளி யிட்டு வருகின்றனர். இதற்கு எதிராக நடவடிக்கை எடுக்க மகளிர் நல அமைப்புகள் முடிவு செய்துள்ளன.

முன்னதாக, போட்டி மைதானத்தில் நின்றபடி எடுத்த தனது ஒளிப்படத்துடன், “இன்றுதான் முழுமை யான நாள்...”, என்று குஜராத் அணியின் வெற்றி குறித்து பதிவிட்டிருந்தார்.

இந்த நிலையிலேயே அவரின் பதிவுக்கு எதிராக தம்மை பெங்களூர் அணியின் ரசிகர்கள் என்று காட்டிக் கொள்ளும் சிலர் ஷா நீல் கில் குறித்து தவறான கருத்து களை பதிவு செய்துள்ளனர். அத்துடன், கில்லின் குடும்பத்தையும் தவறாக சித்திரித்துள்ளனர்.

இதேசமயம், கில்லின் சகோதரிக்கு ஆதரவாகவும் பலர் கருத்துகளை பதிவிட்டு வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)



# இறுதிக்கு முந்தைய சுற்றில் ஆட நாம் தகுதியான அணி இல்லை!

## பெங்களூர் அணியின் தலைவர்



பெங்களூர், மே 24

ஐ.பி.எல். கிரிக்கெட்டில் பிளே - ஓவ் சுற்றுக்கு தகுதி பெறும் அணியாக நாங்கள் விளையாடவில்லை என்று பெங்களூார் அணியின் தலைவர் டு பிளசிஸ் கூறியுள் ளார்.

ஞாயிற்றுக்கிழமை நடந்த குஜராத் அணிக்கு எதி ரான போட்டியில் பெங்களூர் தோல்வியடைந்தது. இதனால், பெங்களூர் அணி இறுதிக்கு முந்தைய (பிளே ஓவ்) சுற்றுக்கு முன்னேறும் வாய்ப்பை அந்த அணி இழந்தது.

நட்சத்திர வீரர்களை உள்ளடக்கிய பெங்களூர் அணி இதுவரை ஐ. பி. எல். கிண்ணத்தை வென்றது கிடை யாது. அந்த அணி முதல் சுற்றுடன் நடையை கட்டுவது இது 8ஆவது முறையாகும்.

தோல்வி குறித்து பெங்களூார் அணியின் தலைவர் கூறுகையில்,

“துடுப்பாட்டத்தைப் பொறுத்தவரை முதல்-4 வீரர்கள் கணிசமான பங்களிப்பை வழங்கினர். இந்தத் தொடரில் எங்களது நடு வரிசை வீரர்கள் சீராக ஓட்டங் கள் எடுக்க தவறினர். ஆட்டத்தை வெற்றிகரமாக முடிப்பதில் முன்னேற்றம் தேவை. கடந்த ஆண்டு தினேஷ் கார்த்திக் ஆட்டத்தை வெற்றிகரமாக முடிப் பதில் வல்லவராக திகழ்ந்தார். ஆனால், இந்த முறை அப்படி அமையவில்லை. வெற்றிகளை குவித்த அணி களை நீங்கள் திரும்பி பார்த்தால் அந்த அணிகளில் 5, 6, 7ஆவது வரிசையிலும் சில அதிரடி ஆட்டக்காரர்கள் இருப்பது தெரியும்.

இந்தத் தொடரில் நாங்கள் மிகச்சிறந்த வலுவான அணிகளில் ஒன்றாக இருக்கவில்லை. அதிர்ஷ்டவசமாக தொடர் முழுவதும் சில மெச்சத்தகுந்த ஆட்டத்தை வெளிப்படுத்தினோம். ஆனால், ஒட்டுமொத்தத்தில் ஓர் அணியாக 14 ஆட்டங்களில் ஆடிய விதத்தை திரும்பி பார்த்தால், அநேகமாக நாங்கள் இறுதிக்கு முந்தைய சுற்றுக்கு தகுதியான அணி கிடையாது. குஜராத்துக்கு எதிரான ஆட்டத்தில் அடைந்த தோல்வி மிகுந்த வேதனை அளிக்கிறது. வெற்றிக்காக கடுமையாக உழைத்தோம். துரதிர்ஷ்டவசமாக நெருங்கி வந்து வீழ்ந்து விட்டோம் என்றார். (ஐ)

# உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் போட்டி இந்திய அணி இங்கிலாந்து சென்றது



புதுடில்லி, மே 24

உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் போட்டியில் விளையாடும் இந்திய அணி வீரர்களில் ஒரு பகுதியினர் நேற்று இங்கிலாந்துக்கு சென்றனர்.

உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடர் ஜூன் 7ஆம் திகதி நடக்க வுள்ளது. இங்கிலாந்தின் ஓவல் மைதானத்தில் நடக்கும் இந்தப் போட்டியில் இந்தியா - அவுஸ்திரேலிய அணிகள் மோதுகின்றன.

இந்த நிலையில், இந்தப் போட்டியில் விளையாடும் வீரர் களை இந்திய கிரிக்கெட் சபை முற்கூட்டியே இங்கிலாந்துக்கு அனுப்புகின்றது.

ஐ. பி. எல். தொடரில் 6 அணி கள் இறுதி சுற்றுக்கு தகுதி பெற வில்லை. இந்த அணிகளில் விளை யாடிய, விராட் கோலி, முஹமது சிராஜ் ஆகியோர் நேற்று லண்டன் பயணமாகினர். இவர்களுடன் சுழல்பந்து வீச்சாளர்கள் ஆர். அஸ் வின், அக்ஷர் பட்டேல், ஷர்துல் தாகூர் மற்றும் தலைமை பயிற்சியா ளர் ராகுல் டிராவிட் ஆகியோரும் சென்றனர்.

இறுதிப் போட்டி, இறுதிக்கு முந்தைய சுற்றில் விளையடும் அணிகள் அந்தப் போட்டிகள் நிறை வடைந்ததும் லண்டன் செல்வர். ஏற்கனவே இங்கிலாந்துக்கு சென்று விட்ட புஜாரா அங்கு கவுண்டி கிரிக்கெட்டில் விளையாடி வருவது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ‘அடிடாஸ்’ இந்திய அணியின் புதிய அனுசரணையாளரானது




மும்பை, மே 24

இந்திய கிரிக்கெட் அணியின் புதிய அனுசரணையா ளராக மாறியுள்ளது ‘அடிடாஸ்’ நிறுவனம். எதிர்வரும் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில் இந் திய கிரிக்கெட் அணி, அவுஸ்திரேலிய அணிக்கு எதிராக புதிய அனுசரணையாளராக அடிடாஸ் வடிவமைத்த மற்றும் தயாரித்த சீருடையை அணிந்து விளையாடும்.

வரும் 2028 மார்ச் வரையில் அனைத்து வகை இந்திய கிரிக்கெட் அணிகளுக்குமான சீருடை மற்றும் ஏனைய பொருட்களை அடிடாஸ் நிறுவனமே வடிவமைக்கும்.

இதனை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை உறுதி செய்துள்ளது. இதன் மூலம் நைக் நிறுவனத்தின் 15 வருட கால அனுசரணை முடிவுக்கு வந்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# போதை வியாபாரத்தை ஒழிக்க மக்களின் ஒத்துழைப்பு தேவை!

## பொது பாதுகாப்பு அமைச்சர் கோரிக்கை

கொழும்பு, 24

போதைப்பொருள் வியாபாரம், பாதாளம குழு செயல்பாடு ஆகியவற்றை முழுமையாக இல்லாதொழிக்க எதிர்வரும் நாட்களில் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். போதைப்பொருள் வியாபாரம் தொடர்பில் பொதுமக்கள் பொலிஸாருக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும். பொதுமக்கள் வழங்கும் தகவல்களின் இரகசியத்தன்மை பாதுகாக்கப்படும் என்பதை பொறுப்புடன் குறிப்பிட்டுக் கொள்கிறேன் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார்.

பத்தரமுல்லையில் உள்ள பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் பணிமனையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- போதைப்பொருள் வியாபாரம்,பாதாளக் குழு செயற்பாடு ஆகிய இரண்டுக்கும் நெருங்கிய தொடர்பு காணப்படுகிறது. இவர்களால் பொதுமக்களுக்கு பெரும் இடையூறு காணப்படுகிறது. அத்துடன், சமூகத்தின் மத்தியில் அச்சநிலை காணப்படுகிறது.

போதைப்பொருள் வியாபாரம் மற்றும் பாதாளக் குழு செயற்பாடு ஆகியவற்றை முழுமையாக இல்லாதொழிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

ஒரு பிரதேசத்தில் இடம்பெறும் போதைப்பொருள் வியாபாரம் குறித்து அந்த பிரதேசத்தில் வாழும் மக்கள் நன்கு அறிவார்கள். பொதுமக்களின் ஒத்துழைப்பு இல்லாமல் போதைப்பொருள் வியாபாரத்தை முழுமையாக இல்லாதொழிக்க முடியாது.

போதைப்பொருள் வியாபாரம் தொடர்பில் பொதுமக்கள் பொலிஸாருக்கு தகவல் வழங்க வேண்டும். பொலிஸாருக்கு வழங்கப்படும் தகவலின் இரகசியத்தன்மை பாதுகாக்கப்படுமா என பொதுமக்கள் சந்தேகம் கொள்கிறார்கள்.

பொதுமக்களிடமிருந்து கிடைக்கப் பெறும் தகவலின் இரகசியத்தன்மையை பேணுவதற்கு தற்போது விசேட வழிமுறை பின்பற்றப்படுகிறது. ஆகவே, பொதுமக்கள் தைரியமாக பொலிஸாருக்கு ஒத்துழைப்பு வழங்கலாம் -என்றார். (ஐ)

# செஞ்சிலுவை சங்க யாழ்.கிளை ஏற்பாட்டில் இரத்ததான முகாம்



யாழ்ப்பாணம், மே 24

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்.கிளையினரின் ஏற்பாட்டில் நேற்று இரத்ததான முகாம் ஒன்று இடம்பெற்றது.

மே 8 சர்வதேச செஞ்சிலுவை மற்றும் செம்பிறை சங்கங்களின் உலக செஞ்சிலுவை தினத்தை முன்னிட்டு நேற்று யாழ்ப்பாண செஞ்சிலுவைச் சங்கக் கிளையினரின் ஏற்பாட்டில் இந்த இரத்ததான முகாம் கோவில் வீதியில் உள்ள யாழ்ப்பாணக் கிளை அலுவலகத்தில் இடம்பெற்றது.

இந்த இரத்ததான முகாமில் பொலிஸார், விசேட அதிரடிப் படையினர் மற்றும் செஞ்சிலுவைச் சங்க உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டு குருதிக்கொடை வழங்கினர். (அ)

# பருவகாலச்சீட்டு கட்டணம் உயரும்

கொழும்பு, மே 24

இலங்கை போக்குவரத்துச் சபையினால் பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படும் பருவகாலச்சீட்டுக் கட்டணத்தை 25 முதல் 30 சதவீதத்தால் அதிகரிப்பதற்கு போக்குவரத்து அமைச்சு தீர்மானித்துள்ளது.

அத்துடன் பாடசாலை பருவகாலச் சீட்டுக்கு மேலதிகமாக பல்கலைக்கழகங்கள் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கான பருவகாலச் சீட்டுக் கட்டணத்தையும் அதிகரிப்பதற்கு போக்குவரத்து அமைச்சு தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அம்பாறை பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துரைத்த போக்குவரத்து அமைச்சர் பந்துல



குணவர்தன இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

இதேவேளை, புதிய கட்டண அதிகரிப்புக்கு அமையவே, பாடசாலை மாணவர்களுக்காக போக்குவரத்தில் ஈடுபடும் பஸ்களை இல்லாது செய்வதா அல்லது தொடர்வதா என்பது குறித்து தீர்மானிக்கப்படும் எனவும் அவர் கூறினார். (அ)

# அநாதையான ஆட்சியாளர்களின் இறுதி ஆயுதம் அடிப்படைவாதம்!

## எச்சரிக்கின்றார் பிமல் ரத்நாயக்க

கொழும்பு, மே 24

**மக்கள் கவனமாக இருக்கவேண்டும் எனவும் அநாதைகளாகியுள்ள ஆட்சியாளர்கள் இறுதியாகப் பற்றிப்பிடிக்க முயற்சிக்கும் கொடி அடிப்படைவாதம் எனவும் மக்கள் விடுதலை முன்னணியின் தேசிய அமைப்பாளர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.**

மக்கள் விடுதலை முன்னணியின் தலைமையகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- குறிப்பாக வடக்கு மாகாணத்தில் சமய சமூகங்களை அடிப்படையாகக் கொண்டு கடந்த சில மாதங்களாக மோதல்கள் அதிகரித்து வருகின்றன.

இதனால் ஏற்படப்போகும் எதிர்கால அழிவுகளைத் தடுக்கவும் இதன் பின்னணியில் இருக்கும் அரசியல் விடயங்களை தெளிவுப்படுத்துவதும் எமது கடமை.

மதக் குழுக்களை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு பிரச்னைகள் ஏற்பட்டு அது மோதலாக மாறலாம் என தேசிய மற்றும் சர்வதேச ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டுள்ளன.

வடக்கு-கிழக்கு பிரதேசங்களில் மிகவும் பழமையான வரலாற்றுடன் கூடிய பௌத்த, இந்து, கிறிஸ்தவ, கத்தோலிக்க, முஸ்லிம் வழிபாட்டு தலங்கள் இருக்கின்றன.

ஒரு மோதலை தவிர ஏனைய அனைத்தும் புதிய வழிபாட்டு



தலங்களை நிர்மாணித்தல் அல்லது மாற்றும் முயற்சி அல்லது புதிதாக அடையாளம் காணப்பதை அடிப்படையாகக் கொண்டு ஏற்பட்டுள்ளன.

இப்படியாக ஏற்படும் மோதல்கள் அடிப்படையான மோதல்களாக மாறிய சந்தர்ப்பங்கள் இருக்கின்றன.

எமது நாட்டு மக்கள் மனதில் இனவாத மதவாதக் கருத்துக்கள் பதிந்துள்ளன.

பெரும்பான்மை மக்களுடன் கலாசார ரீதியான வேறுபாடுகளை கொண்ட சிறிய மக்கள் குழுக்கள் இருக்குமாயின் அந்த சிறிய குழுக்களுக்கு அழுத்தங்கள் இருப்பதை நாங்கள் காண்கின்றோம்.

சில இடங்களில் இந்த சிறிய மக்கள் குழுக்களுக்கு கஷ்டங்கள் ஏற்படுத்தப்படுகின்றன.

அவற்றை மோதலாக மாற்றி மத குருமார் தமது தனிப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதை நாங்கள் காண்கின்றோம்.

வடக்கு மாகாணத்தில் பிரதேச அரசியல் கட்சிகளுக்கு இடையிலான அதிகாரப் போட்டியின் மூலம் மோதல்களை ஏற்படுத்தி அந்த குற்றச்சாட்டை வேறு அணிகள் மீது சுமத்துவதும் தெளிவாகியுள்ளது.

எமது அரசியலமைப்புச் சட்டத்தில் மதத்தைப் பின்பற்றும் உரிமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து இடங்களிலும் இந்த உரிமை பாதுகாக்கப்படவேண்டும்.

வர்த்தக, தனிப்பட்ட, இனவாத அரசியல் போன்ற நோக்கங்களுக்காக மதச் சுதந்திரத்தை பயன்படுத்த இடமளிக்கவேண்டாம் என நாங்கள் மக்களிடம் வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறோம்.

இதன் மூலம் முழு நாட்டு மக்களுமே இழப்பீட்டைச் செலுத்த வேண்டியேற்படும்- என்றார். (அ)

# மாணவிகள் துஷ்பிரயோகம் மற்றொரு ஆசிரியரும் கைது

கொழும்பு, மே 24

பொலநறுவைப் பகுதியில் பாடசாலை மாணவிகளைப் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய குற்றச்சாட்டின் கீழ் 41 வயதுடைய மேலதிக வகுப்பு ஆசிரியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதான சந்தேக நபர், நீதிவானின் உத்தரவுக்கு அமைவாக எதிர்வரும் மே 29 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் இவ்வருடம் ஜனவரி மாதம் முதல் பல தடவைகள் பாடசாலை மாணவிகளை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியுள்ளார் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

பாதிக்கப்பட்ட ஆறு மாணவிகளின் பெற்றோர்கள் இது தொடர்பில் பொலனறுவை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். ஏனைய மாணவிகளின் பெற்றோர்கள் முறைப்பாட்டை மேற்கொள்ள முன்வரத் தயங்குவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

முறைப்பாடுகளின் அடிப்படையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டு பொலனறுவை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதன் பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (அ)

# எரிபொருள் கோட்டா மாற்றமில்லை

கொழும்பு, மே 24

நாட்டில் தற்போது அமுலிலுள்ள எரிபொருள் கோட்டாவில் எவ்வித மாற்றமும் செய்யப்படமாட்டாது என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

வாராந்தம் விநியோகிக்கப்படும் எரிபொருளின் அளவை மாற்றமின்றி பேணவுள்ளதாக எரிசக்தி அமைச்சின் உயரதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

கையிருப்பில் உள்ள எரிபொருள் மற்றும் கொள்வனவுக்கான இயலுமை உள்ளிட்ட விடயங்களைக் கருத்திற்கொண்டு எரிபொருள் கோட்டா முறையில் மாற்றம் ஏற்படுத்தாதிருக்க திட்டமிடப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

நாட்டின் எரிபொருள் சந்தையில் ஏனைய சர்வதேச நிறுவனங்களின் முதலீடுகள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர், தற்போது அமுலிலுள்ள எரிபொருள் கோட்டா முறையில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படக்கூடுமென அவர் சுட்டிக்காட்டினார். (அ)

## முன்னாள்...

தோட்டாக்களை வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் சட்ட மா அதிபர் கொழும்பு மேல் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய் தார்.

நீண்டகால விசாரணையின் பின்னர், மேல் நீதிமன்ற நீதிபதி தமித் தொட்டவத்த பிரதிவாதிக்கு எதிரான குற்றச்சாட்டுகள் அரச தரப்பால் சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதாகத் தீர்மானித்து இந்த தண்டனையை விதித்தார்.

## தண்ணீரே...

- இவ்வாறு தெரிவித்த ஈ. பி. ஆர். எல். எவ்வின் தலைவர் க. பிறேமசந்திரன் (சுரேஷ்), வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்தில் திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களை உருவாக்குவதற்கான முயற்சியா? இது என்றும் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்த அறிக்கையின் முக்கிய அம்சங்கள் வருமாறு,

தமிழ் மக்களின் பூர்வீக நிலமான முல்லைத்தீவு மணலாறை மகாவலி அபிவிருத்தி என்ற பெயரில், சிங்கள மக்களுக்குத் தாரைவார்த்துக் கொடுத்து இதற்கு வெலிஓயா என்று பெயரையும் சூட்டப்பட்டுள்ளது. மகாவலி எல் வலயம் என்று சொல்லப்படும் இந்தப் பிரதேசத்துக்கு இதுவரையில் மகாவலி தண்ணீர் எட்டிப்பார்த்ததும் கிடையாது. எட்டிப்பார்க்கப் போவதுமில்லை. மாறாக, அந்நிலங்களில் பூர்வீகமாக பயிர்செய்த தமிழ் மக்களின் காணிகள் பறிமுதல் செய்யப்பட்டு, சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டுள்ளார்கள்.

இன்று மகாவலி எல் வலயத்துக்கே தண்ணீர் வராத நிலையில், நெடுங்கேணி, மாங்குளம், வவுனிக்குளம், துணுக்காய் போன்ற பிரதேசங்களை உள்ளடக்கி மகாவலி ஜே என்னும் புதியதோர் வலயம் உருவாக்கப்படுகிறது. இதுவும் எல் வலயம் போன்று சிங்களக் குடியேற்றங்களுக்கே தவிர, இங்கு மகாவலி தண்ணீர் வரப்போவது கிடையாது.

இந்த புதிய வலயம் தொடங்குவதற்கு முன்பாகவே, நெடுங்கேணியில் ஆயிரம் ஏக்கர் நிலத்தை சீன கம்பனியின் பினாமி நிறுவனமான தாய்லாந்தைச் சேர்ந்த நிறுவனம் ஒன்றுக்கு, கரும்பு பயிரிடக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொண்டிருப்பதாக ஊடகங்கள் தெரிவிக்கின்றன. இவ்வாறு சுவீகரிக்கப்படவுள்ள நிலங்கள் ஏற்கனவே மத்தியதர வகுப்பினருக்குப் பிரித்து வழங்கப்பட்ட நிலங்கள் ஆகும். யுத்தத்தின் காரணமாக அந்த நிலங்கள் காடுமண்டிப்போக, அவற்றை வன இலாகாவுக்கு சொந்தமான காணிகள் எனக்கூறி, அவற்றை வெளிநாட்டு நிறுவனங்களுக்கு விற்க முயற்சிப்பது கண்டிக்கத்தக்கது.

இவ்வாறு கரும்பு பயிரிடுவதற்கு எத்தனை ஆயிரம் சிங்களக் குடும்பங்கள் குடியேற்றப்படும் என்பது யாருக்கும் தெரியாது. மணலாறுக்கு நேர்ந்தது தான் நெடுங்கேணி, மாங்குளம், வவுனிக குளம் போன்றவற்றுக்கும் ஏற்படும் என்பதை தமிழ் மக்களும் தமிழ் மக்களின் பிரதிநிதிகளும் மனதில் கொள்ள வேண்டும்.

ஏற்கனவே திருகோணமலையை சுற்றிவளைத்து சிங்களக் குடியேற்றத்தின் மூலம், எவ்வாறு சேருவாவில என்ற சிங்கள தேர்தல் தொகுதி உருவாக்கப்பட்டதோ, அதேபோல வவுனியாவைச் சுற்றிவளைத்து, சிங்கள குடியேற்றங்களை கொண்டுவருவதற்கான ஒரு திட்டமாகவே இது இருக்கின்றது.

வடக்கு மாகாணத்தை பொறுத்த வரையில், மகாவலி அபிவிருத்தி என்பது முழுக்க முழுக்க சிங்கள குடியேற்றங்களுக்கே என்பதை தமிழ்க் கட்சிகள் புரிந்துகொள்ள வேண்டும். வடக்கு மாகாண தமிழ் மக்களுக்கு மகாவலி அபிவிருத்தி சபை தேவையில்லை என்பதையும் அரசாங்கம் புரிந்து கொண்டு, அதனை வடக்கு மாகாணத்திலிருந்து வெளியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கோருகின்றோம் - என்றுள்ளது. (ஐ)

## தையிட்டியில்...

விகாரைக்கு அருகிலுள்ள காணியில் இரண்டாவது நாளாக போராட்டம் தொடர்ந்தது.

இந்தப் போராட்டத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், பேச்சாளர் சுகாஷ், மகளிர் அணித் தலைவி திருமதி வாசுகி சுதாகரன் உட்பட பலர் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது, அங்கு வந்த பலாலி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, "இங்கு போராட்டம் நடத்த முடியாது", என்று கூறினார்.

"இது தனியார் காணி, நாங்கள் நீதிமன்றக் கட்டளைக்கு கட்டுப்பட்டே போராட்டத்தை நடாத்துகின்றோம்", என்று போராட்டக்காரர்கள் கூறினர்.

அதனை ஏற்க பொலிஸ் பொறுப்பதிகாரி மறுத்தார்.

அத்துடன், இந்தச் சம்பவங்களை காணொலி பதிவு செய்த முன்னணியின் செயல்பாட்டாளரை தடுக்கும் விதத்தில் அவர் கைது செய்யப்பட்டார்.

இதேநேரத்தில், பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரனை அங்கிருந்து அசையவிடாது பொலிஸ் பொறுப்பதிகாரி இறுகப் பிடித்திருந்த நிலையில் அவரும் இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களுடன் இணைந்து கஜேந்திரனை பலவந்தமாக சுமார் நூறு மீற்றர் தூரம் தூக்கிச் சென்று விகாரைக்கு செல்லும் வீதியின் முகப்பில் கொண்டுசென்று வீசிவிட்டு சென்றனர்.

இதனிடையே, கஜேந்திரனை தூக்கியவர்களில் ஒரு பொலிஸ்காரர் அவரின் காலை திருகினார் என்றும் வலியில் துடித்த அவர் உரத்துக் குரல் எழுப்பிய நிலையில் பின்னர் அந்த செயல் நிறுத்தப்பட்டதாகவும் சம்பவத்தை நேரில் பார்த்த செய்தியாளர் தெரிவித்தார்.

இதனிடையே, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வலி. வடக்கு செயல்பாட்டாளர் நா. கோபிநாத் கைது செய்யப்பட்டார். தொடர்ந்து, போராட்டத்தில் ஈடுபட்டிருந்த திருமதி வாசுகி சுதாகரனை கைது செய்ய பொலிஸார் முயன்றனர். பெண் பொலிஸ் இல்லாமல் தன்னை கைது செய்ய முடியாது என்று அவர் கூறிய நிலையில், பொலிஸ்காரர் ஒருவர் அவரைத் தடியாலும், மற்றொரு பொலிஸ்காரர் அவரின் நெஞ்சிலும் தாக்கினர்.

கைது தொடர்ந்த நிலையில், போராட்டத்தில் ஈடுபட்ட பலர் அங்கிருந்து விலகிச் சென்றனர்.

இதனிடையே போராட்டம் இடம்பெற்ற பகுதிக்கு அருகில் நின்றிருந்த முன்னாள் யாழ். மாநகர சபை உறுப்பினர் ராஜீவ்காந்த், பருத்தித்துறைப் பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் கிரிசாந்தி மதியழகன் ஆகியோரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

சுமார் அரை மணிநேரம் கழித்து போராட்டம் இடம்பெற்ற வீதியில் வைத்து சாவகச்சேரி பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் திருமதி கலைவாணி நிரஞ்சன், வலி. தென்மேற்குப் பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் திருமதி ராஜினி சௌந்தரநாயகம் மற்றும் திருமதி அருள்மலர் ஆகியோரும் பொலிஸாரால் கைது செய்யயப்பட்டனர்.

இந்த சம்பவங்கள் நடந்து கொண்டிருக்கையில் அங்கு வந்த முன்னணியின் பேச்சாளர் சுகாஷ் விகாரைக்கு செல்லும் வீதியின் முகப்பில் தனியாக போராட்டம் நடத்தும் கஜேந்திரன் எம். பியுடன் இணைந்து போராடினார். அவர்களை அங்கிருந்து வெளியேறுமாறு பொலிஸார் கூறியபோதும் அவர்கள் மறுத்து விட்டனர்.

இதனிடையே, போராட்டத்தில் ஈடுபட்டிருந்த கஜேந்திரனுக்கு உணவு வழங்கி விட்டு சென்ற கட்சியின் செயல்பாட்டாளர் தீபன் திலீசனும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

எனினும், நேற்றிரவு 7 மணியளவிலும் கஜேந்திரன் எம். பியும் வேறு சிலரும் விகாரைக்கு செல்லும் வீதியின் முகப்பில் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர் என்று தெரியவந்தது. (ஐ)

## ஜனக...

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் 2021 மார்ச் 14 ஆம் திகதி ஜனக ரத்நாயக்க பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டார்.

எனினும், 2022 ஆம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் உருவான மின்சார நெருக்கடிக்கான தீர்வுகளை பொது பயன்பாடுகள் ஆணைக்குழு முன்வைத்திருந்தாலும், அவை செயல்படுத்தப்படவில்லை. இதனால் மின்வெட்டு இடம்பெற்றது.

இதேபோன்று, மின்சார கட்டண உயர்வு அநீதியானது என்று தெரிவித்தும் அவர் குரல் எழுப்பி வருகின்றார். இதனால், அரசாங்கம் அவரை கடுமையாக விமர்சித்தது.

இந்த நிலையில், ஜனக ரத்நாயக்கவை பதவி நீக்கம் செய்ய இன்று பாராளுமன்றில் பிரேரணை கொண்டு வருகின்றது ஆளும் கட்சியான பொதுஜன பெரமுன. அந்தக் கட்சி அவருக்கு ஆதரவாக வாக்களிக்கும் என்று கூறப்படும் நிலையில், பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, சுதந்திர மக்கள் கூட்டணி, மேலவை இலங்கை கூட்டணி என்பன எதிர்த்து வாக்களிக்கும் என்று அறிவித்துள்ளன.

## இராசாயன...

நேற்று செவ்வாய்க்கிழமை இடம் பெற்ற பந்தயம், சூதாட்ட விதிப்பனவு (திருத்தச்) சட்டமூலம் மீதான விவாதத்தின்போது உரையாற்றிய சிறீதரன் எம். பி. போர் காலத்தில் அரச படைகள் நிகழ்த்திய மீறல்கள் குறித்து குறிப்பிட்டார். இதற்கு பதிலளிக்கும் வகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இறுதிக்கட்ட யுத்தம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் குறிப்பிடும் கருத்து அடிப்படையற்றது. யுத்தத்தில் இரசாயன குண்டு தாக்குதல் நடத்தப்பட்டதாக குறிப்பிடுவது அடிப்படையற்றது.

இறுதி கட்ட யுத்தத்தின் போது இரசாயன குண்டுத்தாக்குதல் நடத்தப்படவில்லை என்பது பல அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

படையினரால் தமிழர்கள் கொல்லப்பட்டார்கள் என்று குறிப்பிடுவதை ஒரு போதும் ஏற்க முடியாது. 2 இலட்சத்து 95 ஆயிரம் தமிழர்களை பாது காத்தே இறுதிகட்ட யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. விடுதலை புலிகள் அமைப்பு 3 இலட்சம் தமிழர்களை பணய கைதிகளாக வைத்திருந்த போது இவர்கள் எங்கு சென்றார்கள். இன அழிப்பு என்று குறிப்பிட்டுக் கொண்டு இவர்கள் தான் தொடர்ந்து முரண்பாடுகளை ஏற்படுத்துகிறார்கள் - என்றார்.

## புத்தசாசனத்தை...

முன்னதாக எதிர்க்கட்சி தலைவர், மிகிந்தலை முதல் அநுராதபுரம் வரையான பொசன் உற்சவத்துக்கு போதுமான நிதி இதுவரை ஒதுக்கப்படவில்லை. இந்த நிதி வழங்கலை உறுதிப்படுத்த வேண்டும் என்று கூறினார்.

இதன்போது எழுந்த பிரதமர் தினேஷ் குணவர்த்தன,

1972 ஆம் ஆண்டு அரசியலமைப்பில் பௌத்த மதத்துக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. 1978 ஆம் ஆண்டு 9 ஆவது அத்தியாயத்தில் பௌத்த மதம் தொடர்பான ஏற்பாடுகள் வலுப்படுத்தப்பட்டுள்ளன.

புத்தசாசனத்தை பாதுகாப்பதற்கும், அதனை வளர்ச்சி பெற செய்வதற்கும் அரசாங்கம் பொறுப்புடன் செயல்படும். நடைமுறைக்கு சாத்தியமான வகையில் பௌத்த மத விவகாரங்களில் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட புதிய அம்சங்களை நடைமுறைப்படுத்த அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை எடுத்துள்ளது. மிகிந்தலை - அநுராதபுரம் பொசன் உற்வசத்துக்கு தேவையான நிதி ஒதுக்கப்படும் என்றும் தெரிவித்தார். (ஐ)

## சஞ்சிகை வெளியீடு

வடமராட்சி, மே 24

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை, பண்பாட்டு பேரவையின் மாதாந்த வெளியீடான ஞானச்சுடர் ஆன்மீக சஞ்சிகையின் வைகாசி மாத இதழ் வெளியீட்டு விழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10. 30 மணிக்கு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

## நலன்புரி...

முகங்கொடுக்கும் சிரமங்களை கருத்தில் கொண்டே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

வங்கிக் கணக்குகள் இல்லாத பயனாளர்களுக்கு வங்கிக் கணக்கை ஆரம்பிக்கத் தேவையான உதவிகளை வழங்கவுள்ளதாக நலன்புரி நன்மைகள் சபையின் தலைவர் பி. விஜயரத்ன குறிப்பிட்டார்.

'அஸ்வெசும' நலன்புரித் திட்டத்தின் கீழ், குறைந்த வருமானம் பெறும் 40 வீத மக்களுக்கு 4 பிரிவுகளின் கீழ் நிதியுதவி வழங்கப்படவுள்ளது. இதற்கமைய, மிகவும் ஏழ்மையான பிரிவில் உள்ள குடும்பத்திற்கு மாதாந்தம் 15,000 ரூபா அரசாங்கம் ஊடாக வழங்கப்படவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மன்னாரில்...

வந்தனர்.

அந்தச் சமயம், எதிர்த் திசையில் வந்த மகேந்திரா வாகனம் வேகக்கட்டுப்பாட்டை இழந்து முச்சக்கர வண்டியை மோதித் தள்ளியது. இதில் முச்சக்கர வண்டியின் சாரதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

அதில், பயணித்த ஒரே குடும்பத்தை சேர்ந்த ஐவரும் படுகாயங்களுக்கு இலக்காகினர். அவர்கள் உடனடியாக மன்னார் பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

விபத்துக் குறித்து மன்னார் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## மாகாண...

நடவடிக்கையும் எடுக்கவில்லை.

2017இல் இது தொடர்பில் சட்டமூலம் ஒன்று பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டபோதும் அதை நிறைவேற்ற அரசு இன்னும் நடவடிக்கை எடுக்கவில்லை. இதேவேளை, உள்ளூராட்சி சபைகளின் ஆயுள்காலமும் நிறைவடைந்துள்ளது. அந்தத் தேர்தலை நடத்துவதற்குக்கூட அரசு நடவடிக்கை எடுக்கவில்லை.

அரசின் கவனம் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதில்தான். அதற்கான ஏற்பாடுகளை ஜனாதிபதி செய்து வருகின்றார். இந்தநிலையில்தான் மாகாண சபைகளுக்கான தேர்தலை உடனடியாக நடத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு இந்தியா அழுத்தம் கொடுக்கத் தொடங்கியுள்ளது என்று அறியமுடிகின்றது.

ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்று ஒரு வருடமாகின்றது. ஆனால், அவர் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை புதுடில்லி சென்று சந்திப்பதற்கு இந்திய மத்திய அரசு இன்னும் அனுமதி வழங்கவில்லை. அதற்கு காரணம் மாகாண சபைத் தேர்தலை இலங்கை அரசு நடத்தாமல் இருப்பதே என்றும் கூறப்படுகின்றது.

## ஏ.எல்...

பாடங்களுக்கும் விடைத்தாள் மதிப்பீட்டு பணி முடிவடைந்துள்ளது. 12 பாடங்களின் விடைத்தாள்களின் மதிப்பீட்டு பணி முடிக்கப்பட்டுள்ளது என்று அவர் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பல்கலைக்கழக ஆசிரியர் சங்க சம்மேளனம் விடைத்தாள் மதிப்பீட்டு பணியில் முழுமையாக ஈடுபட்டுள்ளது. க.பொ.த (சா/த) பரீட்சையை திட்டமிட்டபடி ஆரம்பிப்பதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் மேலும் கூறினார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# கனடாவின் இனப்படுகொலையை இலங்கையிலும் அனுஷ்டிப்போம்!

## விமல் வீரவன்ஸ சபையில் யோசனை

கொழும்பு, மே 24

**கனடாவில் பூர்வீகக் குடிகளான செவ்விந்தியர்கள் இனப்படுகொலை செய்யப்பட்டதை, இலங்கையிலும் அனுஷ்டிக்க வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.**

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றுகையில் அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கையில் இனப்படுகொலை நடந்ததாகக் கனடா பிரதமர் கூறியுள்ளார்.

இதனை இந்த சபை கண்டிக்கவேண்டும். கனடாவில் மண்ணின் மைந்தர்கள் செவ்விந்தியர்கள் கொன்று குவிக்கப்பட்டனர். அண்மையில் பெரிய புதைகுழி யொன்றும் கண்டுபிடிக்கப்பட்டது.

மண்ணின் மைந்தர்கள் கொன்று குவிக்கப்பட்டதை ஜூன் 21 ஆம் திகதி அனுஷ்டிக்கிறார்கள். இலங்கையில் நடக்காத இனப்படுகொலையை அவர்கள் அனுஷ்டிக்க முடியுமென்றால், கனடாவில் நடந்த இனப்படு கொலையை நாம் ஏன் அனுஷ்டிக்க முடியாது?

அதனால் ஜூன் 21ஆம் திகதி கனடா இனப்படு கொலையை நாம் அனுஷ்டிக்க பிரேரணை நிறை வேற்றவேண்டும் - என்றார். (அ)



# ஹெரோயினுடன் உரும்பிராயில் பெண் சிக்கினார்!

யாழ்ப்பாணம், மே 24

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உரும்பிராய் பகுதியில் 50 மில்லி கிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் 28 வயதுடைய பெண்ணொருவர் பொலி ஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் ஏற்கனவே ஹெரோயின் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டு நீதிமன் றத்தில் முற்படுத்தப்பட்டு நான்கு மாதங்கள் சிறையிலி ருந்து விடுதலையானவர். அந்த வழக்கு நிலுவையில் உள்ள நிலையில் மீண்டும் ஹெரோயின் போதைப் பொருளுடன் குறித்த பெண் கைது செய்யப்பட்டுள் ளார்.

கைது செய்யப்பட்ட பெண்ணின் கணவரும் ஹெரோயின் போதைப்பொருளுடன் கைது செய்யப் பட்டு தற்போது சிறைவாசம் அனுபவித்து வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட பெண் விசாரணையின் பின் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளதாக கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# அவசர நிலையைக் கையாள வைத்தியர்கள் அடங்கிய குழு

கொழும்பு, மே 24

அவசர நிலையைக் கையாள்வதற்கு தேவையான வைத்தியர்கள் அடங்கிய சுகாதாரக் குழுவொன்று பயிற் சியை நிறைவு செய்துள்ளதாக தேசிய டெங்கு கட்டுப் பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

தொற்றா நோய் பிரிவு மற்றும் டெங்கு கட்டுப்பாட் டுப் பிரிவினர் இணைந்து இந்தப் பணிகளை மேற் கொண்டுள்ளதாக அந்தப் பிரிவின் வைத்தியர் லஹிரு கொடித்துவக்கு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவாக, நாடளா விய ரீதியில் உள்ள 73 வைத்தியசாலைகளில் காய்ச்ச லால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அல்லது டெங்கு நோயாளர்கள் என சந்தேகிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை நாளாந்தம் பதிவாகி வருகின்றது.

ஐ.டி.எச் வைத்தியசாலை, தேசிய வைத்தியசாலை, கண்டி தேசிய வைத்தியசாலை, நீர்கொழும்பு பொது வைத்தியசாலை மற்றும் கம்பஹா வைத்தியசாலைகளில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. டெங்கு நோயாளர்களின் அதிகரிப்பு ஒவ் வொரு நாளும் அவதானிக்கப்படுகிறது.

400 இற்கும் மேற்பட்ட வைத்தியர்கள் மற்றும் தாதியர்கள் முழு நாட்டையும் உள்ளடக்கி தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு மற்றும் தொற்று நோய் கள் நிறுவகம் ஆகியவற்றினால் பயிற்சியளிக்கப்பட் டுள்ளனர்.

தற்போது அந்த மருத்துவர்கள் மற்றும் தாதியர்கள் டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக விடுதிகளில் பணியாற்றி வருகின்றனர் - என்றார். (அ)

# போரில் உயிரிழந்தோருக்கு கொழும்பில் நினைவுத் தூபி

## அமைப்பதற்கு அமைச்சரவை அனுமதி

கொழும்பு, மே 24

சுதந்திரத்துக்குப் பின்னர் இலங்கையில் இடம்பெற்ற ஆயுத மோதல்கள், அரசியல் மற்றும் உள்நாட்டுக் கல வரங்களினால் உயிரிழந்தவர்களை நினைவுகூரும் வகை யில் கொழும்பில் நினைவுத் தூபியை நிர்மாணிப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்வைத்த யோச னைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அதற்கமைய, ஆயுதப்படை மற்றும் பொலிஸ் உறுப்பினர்கள் மற்றும் முன்னாள் போராளிகள் உட்பட அனைத்து பொதுமக்களையும் நினைவு கூரும் வகையில் இந்த நினைவுச்சின்னம் நிர்மாணிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (அ)

# ஜப்பான் பறந்தார் ரணில்

கொழும்பு, மே 24

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சிங்கப்பூர் மற்றும் ஜப்பானுக்கான உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு நேற்று அதிகாலை நாட்டில் இருந்து புறப்பட்டார்.

சிங்கப்பூருக்கான தனது ஒரு நாள் விஜயத்தின்போது ஜனாதிபதி, சிங்கப்பூரின் சட்டம் மற்றும் உள்துறை அமைச்சர் மற்றும் அந்நாட்டின் பல உயர்மட்ட இராஜ தந்திரிகளுடன் கலந்துரையாடல் நடத்தவுள்ளார்.

இன்று முதல் 27 வரை ஜனாதிபதியின் ஜப்பானுக் கான உத்தியோகபூர்வ விஜயத்தின்போது, ஜப்பானிய பிரதமர் புமியோ கிஷிடாவுடன் கலந்துரையாடல் நடைபெறவுள்ளதுடன், ஜப்பானுக்கும் இலங்கைக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை புதிய அணுகு முறையின் ஊடாக வலுப்படுத்துவது குறித்தும், பிராந் திய மற்றும் சர்வதேச விவகாரங்கள் தொடர்பாகவும் இதன்போது கருத்துப் பரிமாற்றம் இடம்பெறவுள்ளது.

அத்துடன், ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர், நிதியமைச்சர் சுனிவ் சுசுகி மற்றும் டிஜிற்றல் மயமாக்கல் தொடர்பான அமைச்சர் ஆகியோரையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

இதேவேளை, மே 25 மற்றும் 26 ஆம் திகதிகளில் ரோக்கியோவில் நடைபெறும் ஆசியாவின் எதிர்காலம் தொடர்பான 28ஆவது சர்வதேச மாநாட்டில் ஜனாதி பதி ரணில் விக்ரகிமசிங்க உரையாற்ற உள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# ஓமந்தையில் ஒருவர் சூட்டுப் படுகாயம்!

## சந்தேகநபர் கைது

வவுனியா, மே 24

வவுனியா ஓமந்தை பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

ஓமந்தை - வேலர்சின்னக்குளம் பகுதியை சேர்ந்த 52 வயதான ஒருவரே படுகாயமடைந்தார் பொலிஸார் குறிப்பிட்டனர்.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான நபர் தனது தென் னந்தோப்பில் இருந்தபோது, சந்தேகநபர் ஒளிந்திருந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டார் என பொலி ஸார் கூறினர்.

குறித்த இருவருக்கும் இடையில் மிக நீண்ட கால மாக நிலவிய தனிப்பட்ட தகராறு காரணமாக துப்பாக் கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

துப்பாக்கியுடன் கைது செய்யப்பட்ட சந்தேகநபரை வவுனியா நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்த நட வடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஓமந்தை பொலிஸார் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# பெருந்தொகை தங்கத்துடன் அலி சப்ரி ரஹீம் எம்.பி. கைது

கொழும்பு, மே 24

பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் 3.5 கிலோகிராம் எடையுடைய தங்கத்துடன் கட்டுநாயக்க விமான நிலையத்தில் சுங்கப்பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

மத்திய கிழக்கு நாடொன்றிலிருந்து வருகைத் தந்த நிலையிலேயே அலி சப்ரி ரஹீம் சட்டவிரோதமாக தங்கம் கொண்டு வந்தார் என தெரிவித்து கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் சுங்கப்பிரிவினரால் விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட் டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (அ)

# ஜூன் மாதம் 30 முதல் புதிய மின் கட்டணம்

கொழும்பு, மே 24

ஜூலை 1ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் புதிய மின்சாரக் கட்டணங்கள் ஜூன் 30ஆம் திகதி அறிவிக்கப் படும் என இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க நேற்று தெரிவித் தார்.

இலங்கை மின்சார சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட உத்தேச கட்டண திருத்தம் தொடர்பான இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் பதில் ஜூன் முதலாம் திகதி பகிரங்கப்படுத்தப்படவுள்ளதுடன், இலங்கை மின்சாரச் சட்டத்தின் 30ஆவது பிரிவு மற்றும் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு சட்டத்தின் 17ஆவது பிரிவின்படி, கட்டணத் திருத்தம் தொடர்பில், கட்சிகளின் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளுக்கு செவிசாய்க்கவேண்டும் என ஜனக ரத்நாயக்க தெரிவித் தார். (அ)

# பதில் பாதுகாப்பு அமைச்சராக பிரேமித்த பண்டார நியமனம்

கொழும்பு, மே 24

இராஜாங்க அமைச்சர் பிரேமித்த பண்டார தென்னக் கோன் பதில் பாதுகாப்பு அமைச்சராக நியமிக்கப்பட் டுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெளிநாட்டுப் பய ணங்களை முடித்துக்கொண்டு திரும்பும் வரை பதில் பாதுகாப்பு அமைச்சராக பிரேமித்த பண்டார தென்னக் கோன் நியமிக்கப்பட்டுள்ளார். (அ)

# பதில் நிதி அமைச்சராக ரஞ்சித்

கொழும்பு, மே 24

பதில் நிதி அமைச்சராக இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய நியமிக்கப்பட்டுள்ளார் என நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெளிநாட்டுப் பய ணங்களை முடித்துக்கொண்டு வரும் வரை பதில் நிதிய மைச்சராக ரஞ்சித் சியம்பலாபிட்டிய நியமிக்கப்பட் டுள்ளார்.

இதேவேளை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர் வரும் சனிக்கிழமை நாடு திரும்பவுள்ளமை குறிப்பிடத் தக்கது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 24.05.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.